பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 22 திங்கட்கிழமை (08-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:316

## மத்திய ஆசியாவில் போர் மூளும் அபாயம்

# ஆப்கான் மீதான தாக்குதலை அமெரிக்கா நேற்று ஆரம்பித்தது!

வாஷிங்ரன்,ஒக்ரோபர்8

**ஆப்கானிஸ்தான்மீதான பெரும் தாக்குதல் நடவடிக்கையை அமெரிக்கா நேற்று ஆரம்பித்தது.**

**தலைநகர் காபூல் உட்பட ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்கள்மீது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் இணைந்து கூட்டாகக் கடும் வான் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் கூட்டுத் தாக்குதல் நடவடிக்கை இலங்கை நேரப்படி நேற்றிரவு 10 மணியளவில் ஆரம்பமானது.

இந்தப் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான 'குரூஸ்' மற்றும் 'தொமஹ்ஹாக்' ஏவுகணைகள் ஆப்கானிஸ்தான்மீது ஏவப்பட்டன. வான்வழியாக விமானத் தாக்குதல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன.

தலைநகர் காபூலில் உள்ள தலிபான்களின் விமானப் பாதுகாப்பு மையம் மற்றும் கட்டுப்பாட்டு மையம என்பன தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதாகவும் -

தெற்கு ஆப்கானிஸ்தானில் கந்தகார், ஜலலாபாத் விமானத் தளங்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும் -

முற்கொண்டு வெளியான செய்திகள் தெரிவித்தன.

கந்தகாரில் அமைந்திருந்த தலிபான்களின் கட்டளை மையம் உள்ளூர் நேரப்படி நேற்றிரவு 10 மணியளவில் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டதாக சி.என்.என். தெரிவித்தது.

காபூல் நகரில் அடுத்தடுத்துக் கேட்ட பெரும் வெடியோசைகளைத் தொடர்ந்து மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு நகரம் முழுவதும் இருளில் மூழ்கியது. தொலைத் தொடர்பு சேவைகளும் முற்றாகச் செயலிழந்தன.

நகரம் தொடர்ந்தும் குண்டுவெடிப்புச் சத்தங்களால் அதிர்ந்துகொண்டு இருப்பதாகவும் -

விமானங்களின் இரைச்சலையும், விமான எதிர்ப்பு ஆயுதங்களின் வெடியோசைகளையும் இடைவிடாது கேட்க முடிவதாகவும் அங்கிருந்து இன்று அதிகாலை வெளியான ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஐ-3-9)

### காபூலில் ஊரடங்கு

காபூல்,ஒக்.8

அமெரிக்கா நேற்றிரவு நடத்திய முதற்கட்டத் தாக்குதலின்போது, தலிபான்படைகள் பெருத்த எடுப்பில் பதில் தாக்குதல் எதிலும் ஈடுபடவில்லை என்றும் -

எனினும் அவர்கள் பெரும் பதில் தாக்குதல்களுக்குத் தயாராகப் படைகளை நகர்த்தி வருவதாகவும் சில செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்காவின் தாக்குதல்கள் மேலும் தீவிரமாகத் தொடரும் பட்சத்தில் அங்கு பெரும் போர் மூளும் ஆபத்து உருவாகியிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

காபூலிலும் ஏனைய நகரங்களிலும தலிபான்கள் நேற்றிரவு ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தனர். எனினும் பெரும் எண்ணிக்கையான மக்கள் பீதியால் நகரங்களை விட்டு வெளியேறிச் சென்றுகொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

### இந்தியப் படைகள் உஷார் நிலையில்!

புதுடில்லி,ஒக்.8

ஆப்கானிஸ்தான் மதான அமெரிக்காவின் தாக்குதல்கள் ஆரம்பித்ததை அடுத்து, இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நேற்றிரவு அமைச்சரவையின் அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து அங்கு ஆலோசனை நடத்தப்பட்டது. முப்படைகளையும் அதி உஷார் நிலையில் வைக்கும் உத்தரவு உடனடியாக விடுக்கப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.(ஐ)



ஆப்கான் நகரங்களைத் தாக்குவதற்காக மலைகளைத் தாண்டி, சீறிப்பாய்ந்து சென்ற 'குரூஸ்' ஏவுகணைகளில் ஒன்று.

### ஒஸாமா பின்லேடனுக்கு ஆபத்து ஏதும் இல்லை!

#### தாக்குதலுக்குப்பின் தலிபான் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,ஒக்.8

ஆப்கானிஸ்தானின் ஆன்மீகத் தலைவர் முல்லா முஹமட் ஒமரும், ஒஸாமா பின்லேடனும் பாதுகாப்பாக இருப்பதாக பாகிஸ்தானுக்கான ஆப்கான் தூதர் முல்லா அப்துல் சலாம் சாஹிட் தெரிவித்திருக்கிறார்.

நேற்றிரவு அமெரிக்கா நடத்திய முதற்கட்டத் தாக்குதலின் பின்னர் அவர் இஸ்லாமாபாத்தில் இதனைத் தெரிவித்ததாக 'றோய்டர்' செய்தி நிறுவனம் அறிவித்தது.

அமெரிக்காவின் தாக்குதல் ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்றும் பயங்கரவாதச் செயல் என்றும் அவர் வர்ணித்தார்.

இதேவேளை -

அமெரிக்காவின் நியூயோர்க் மீதும பென்டகன் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப்பின் - சுமார் ஒரு மாதகாலம கடந்தபிறகு - ஒஸாமா பின்லேடன் முதற்தடவையாக அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.


வீடியோவில் பதிவு செய்யப்பட்ட அவரது உரை, நேற்றிரவு சில அரபு தொலைக்காட்சிச் சேவைகளில் காண்பிக்கப்பட்டது.

'பலஸ்தீன நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை அமெரிக்காவுக்கு அமைதி கிடைக்காது' என்று அந்த உரையில் பின்லேடன் தெரிவித்திருக்கிறார். (ஐ)

### போர் தொடங்கிய செய்தியை மக்களுக்கு அறிவித்தார் புஷ்!

#### இந்திய, ரஷ்ய தலைவர்களுக்கும் தெரிவிப்பு

வாஷிங்ரன்,ஒக்.8



ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதான செய்தியை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் நேற்று - அமெரிக்க நேரப்படி பிற்பகல் ஒரு மணிக்கு - நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் அறிவித்தார்.

தலிபான்களின் இராணுவ நிலைகள் மீதும், அவர்களின் பாதுகாப்பின் கீழ் இயங்கும் ஒஸாமா பின்லேடனின் 'அல்கெய்டா' கெரில்லா வலை அமைப்பின் தளங்கள் மீதும் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்த நடவடிக்கைக்கு உலகின் முழு ஆதரவையும் அமெரிக்கா பெற்றிருப்பதாகவும் புஷ் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்று அமெரிக்க இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்குச் சற்று முன்னர் அதிபர் புஷ், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு, தாக்குதல் ஆரம்பிக்கவிருப்பது பற்றிய தகவலைத் தெரிவித்தார்.

நேற்று மாலை அதிபர் புஷ், இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடனும் தொடர்பு கொண்டு பேசினார். அமெரிக்காவின் தாக்குதல் தொடர்பாக வாஜ்பாய்க்கு விளக்கிக் கூறிய அவர், அண்மையில் காஷ்மீர் நாடாளுமன்றக் கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் ஜெய்ஸி முஹமட் அமைப்புமீது விரைவில் தடை விதிக்கப்படும் என்றும் வாஜ்பாயிடம் கூறியதாக பி.ரி.ஐ. தெரிவித்தது. (ஐ-3-9)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கத் தமிழர் கூட்டணி முடிவு!

## எனினும் அதற்குத் திருத்தம் சமர்ப்பிக்கவும் தீர்மானம்

கொழும்பு,ஒக்.8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

எனினும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு தவறிவிட்டதை வெளிப்படுத்தும் விததிலான வாசகங்களை சம்பந்தப்பட்ட பிரேரணையில் சேர்த்துக்கொள்ளக் கோரும் திருத்தம் ஒன்றைச் சமர்ப்பிப்பது எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு நேற்று கொழும்பில் கூடி இத்தீர்மானங்களை எடுத்தது.

நீண்ட விவாதத்தின் பின்னர், மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பின்வரும் திருத்தங்களைச் சமர்ப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது:-

"தொடரும் கொடூரமான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்தத் தவறியதாலும் -

யுத்தத்தைத் தொடர்வதினால், விசேடமாக வடக்கு - கிழக்கிலும், மலையகத்திலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் பாரிய துன்ப துயரங்கள் அத்தோடு, உயிரிழப்பு, படுகாயம்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஆன்மீக குருவுக்குப் பாராட்டுக்கள்



யாழ். பல்கலைக்கழகத்தினால் "முதுகலைமாணி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஆன்மீக குரு


**அருட்கவி சீ. விநாசித்தம்பி ஐயா**

அவர்களை மனமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

திர்ஷிகா கலைக்கூடம்,அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (93178)

ஸ்தபதி ந.சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார் குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



**திரு.சண்முகம் கருணாகரன் B.A.(Hons)**

நேற்றுமுன்தினம் (06.10.2001) சனிக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணி B.A.(Hons) பட்டம் பெற்ற **திரு. சண்முகம் கருணாகரனை** (சாவகச்சேரி மடத்தடி) அவர்களை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கந்தர்மடம் (93174) - **தயாபரன் குடும்பத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 06.10.2001இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 'கலைமாணி'ப் பட்டம் பெற்றவரான

**செல்வி தம்பிமுத்து செல்வகலா B.A. (Hons)**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துபவர்: **சகோதரி த.ஜீவகலா**
(ஆசிரியை, புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் ம.வி.)
மற்றும் **அம்மா, அண்ணாமார்** (மல்லாவி). (93156)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அச்சுவேலி
மத்திய கல்லூரி மாணவி

**செல்வி**

**சரண்யா இரத்தினசிங்கம்**

(161 புள்ளிகள்)

2001-5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தையும், யாழ். மாவட்டத்தில் 1ஆம் இடத்தையும் பெற்றுச் சித்தியடைந்துமையைப் பாராட்டுவதுடன் இவரை வழிப்படுத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுவதுடன் இவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து வளர வேண்டும் என வாழ்த்துவதுடன் இவருடன் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

அம்மம்மா, அப்பம்மா
பெரியப்பா
ஆசை மாமா
ராஜன் மாமா
} குடும்பத்தினர்.

(93173)

# நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



*யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலய*
*மாணவி*

**செல்வி மரியதாஸ்**

**மேரி டிஷானி**

2001ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 122 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்குக் கல்வி அறிவு புகட்டிய யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காம் றோட், ஊர்காவற்றுறை. (93167) - **குடும்பத்தினர்.**

# வாழ்த்தும் இறை ஆசியும்

யாழ்.புனித, ஜோண் பொஸ்கோ பாடசாலை மாணவன்

**செல்வன் சந்திரகுமார் மேனன்**



2001ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 127 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவரின் வெற்றிக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், ரியூசன் ஆசிரியர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்க இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

இவரை வாழ்த்திப் பாராட்டுவோர்
**திரு-திருமதி சபாரத்தினம் (தாத்தா, பாட்டி)**
**செல்வி த.நிலானி (தங்கை)**

நல்லூர். (93154)

## பளை மக்களுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

தென்மராட்சி,ஒக்.8

பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணக் கொடுப்பனவாக மூவாயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியினை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச இடம்பெயர்தோர் நலனோம்புச் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சருடன் கலந்துரையாடியதையடுத்து இக்கொடுப்பனவுக்கான நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பயிற்சி நெறி

வடமராட்சி,ஒக்.8

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் வடமராட்சி உப நிலையத்தில் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறியும், ஆங்கில பயிற்சிநெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிகளை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் வடமராட்சி உபநிலைய இணைப்பாளரும் யாழ்பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதி பதியுமான எம்நடராஜசுந்தரம் ஆரம்பித்து வைததார்.

நூறுபேர் இரு பயிற்சி நெறிகளிலும் பயிற்சிபெற்று வருகின்றனர். (ஐ-173)

## பருத்தித்துறை அச்சுவேலி பஸ்சேவை

பருதித்துறையில் இருந்து அச்சுவேலிக்கு புதிய பஸ்சேவை ஒன்றினை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஆரம்பித்துள்ளது.

757 ஆம் இலக்க பாதையைக் கொண்ட இப்பஸ் சேவை ஓராங்கட்டைச் சந்தி, நாவலடி, அல்வாய், மாலிசந்தி, வதிரி, நவிண்டில், உடுப்பிட்டி, தொண்டமனாறு, செல்வச்சந்நிதி ஊடாக இடம்பெற்று வருகிறது. (ஐ-173)

## ஆயுள்வேத வைத்தியசாலை வடமராட்சியில் அமைப்பு

வடமராட்சி,ஒக்.8

வடமராட்சிப் பிரதேசத்தில் புதிய சித்த ஆயுள்வேத வைத்தியசாலை 30 லட்சம் ரூபா செலவில் ஆயுள்வேத திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கரணவாய் மூத்த விநாயகர் கோயிலுக்கு அருகில் உள்ள 5பரப்புக் காணியில் இவ வைத்தியசாலைக்கான கட்டடம் நிர்மாணிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

இவ்வைத்தியசாலையைக் கட்டுவதற்கான காணியை (5பரப்பு) கரணவாய் மத்தியைச் சேர்ந்த வி.சரசலோசினி, என்.தவமணி, கே.தில்லைநாயகம் ஆகியோர் ஆயுள்வேதத் திணைக்களத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கரணவாயில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் சித்த ஆயுள்வேத வைததியசாலை குடாநாட்டில் நிறுவப்படுகின்ற இரண்டாவது ஆயுள்வேத வைத்தியசாலை ஆகும். (ஐ-173)

## சிறப்புரை

யாழ்ப்பாணம்,ஒக்.8

தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருக்கும் சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் நடராஜன் ராமச்சந்திரன் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலில் நடைபெறும் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கவிமாமணி ந.வீரமணி ஐயர், தேவஸ்தான குருக்கள் அரவிந்தக்குருக்கள், யாழ்பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா ஆகியோர் சேக்கிழார் அடிப்பொடியை வரவேற்று உரையாற்றுவார்.

இதற்கு முன்னதாக இன்று காலை 8.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரிக்கும், காலை 10 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் விஜயம் செய்யும் சேக்கிழார் அடிப்பொடி, அங்கு சிறப்புச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துவார். (ஐ-4)

## மலசலகூடம் அமைக்க நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.9

மானிப்பாய், சாவற்கட்டு கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் மீனவர் குடியிருப்புக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 30 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

# நன்றி நவில்கின்றோம்

*எமது கலைச் சேவையைப் பாராட்டுமுகமாக கடந்த புதன்கிழமை இணுவில் கந்தசுவாமி கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியவர்களுக்கும், பொன்னாடைபோர்த்துக் கௌரவித்தவர்களுக்கும் விழாவில் பங்குகொண்ட இணுவை வாழ் மக்களுக்கும், விழாவை ஒழுங்கு செய்தவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம்.*

*இணுவில்,* (93177)

**கலாபூஷணம்**
**கே.ஆர்.சுந்தரமூர்த்தியும் குடும்பத்தினரும்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

*சுன்னாகம் கல்வி நிலையத்தின் நிர்வாகியும் ஆசிரியர்களுமான*

| | | |
|---|---|---|
| S.சுகிர்தன் | B.Com. | (F. Acc.spl) |
| P.மோகனதாஸ் | B.B.A. | (F.M. Spl) |
| S.வின்சன்ட் | B.B.A. | (H.R.M. Spl) |
| V.முரளீதரன் | B.B.A. | (F.M. Spl) |
| T.ஜெயக்குமார் | B.A. | (Sio. Spl) |

ஆகியோர் கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றனர். இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள்,
**சுன்னாகம் கல்வி நிலையம்.**

(C/18581)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை - 2001 இல் சித்தியடைந்த மாணவர்களாகிய

| | |
|---|---|
| **விக்கினேஸ்வரன் ராகவி** | **- 155 புள்ளிகள்** |
| **தியாகராசா நந்தகோபால்** | **- 122 புள்ளிகள்** |
| **தவராசா ராஜ்குமார்** | **- 121 புள்ளிகள்** |

ஆகியோரையும் இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியை செல்வி **அருமைத்துரை சுமதி, செல்வி இராசசிங்கம் சுபத்திரா தேவி** மற்றும் இவர்களை வழிநடத்திய அதிபரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

*காரைநகர்.* (சி18582)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
கலாநிதி ஆ.தியாகராசா. ம.ம.வி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கேதாரகௌரி இராஜரெத்தினம்

(நயினாதீவு)

*(ஓய்வுபெற்ற ஆசிரியை,யாழ். இந்து ஆரம்பபாடசாலை)*

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கல்லூரி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கேதாரகௌரி இராஜரெத்தினம் நேற்று (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் ச.நா.கந்தையா - புவனேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், Dr.ச.இராஜரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி மு.சபாபதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற இராஜஇராஜேஸ்வரி மற்றும் நாகேஸ்வரன், சிவராஜசூரியர், பிறைசூடி ஆகியோரின் சகோதரியும், கிருபாலினி (கனடா), குமரேசன் (கனடா), மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகுமார், பிரியா, Dr.பரணிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான லலிதாம்பிகை, நீலாம்பிகை, சாந்தி மற்றும் மகாலிங்கம், Dr.S.பரராஜசிங்கம், சியாமளா, வசந்தராணி, சரோஜா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*Dr.ச.இராஜரெத்தினம்,*
*9/5, பாத்திபா வீதி,*
*நாரஹேன்பிட்டி.*
*T.P. 01-582971*

தகவல்:
ச.நா.க.நாகேஸ்வரன்,
(சகோதரர்)

(93176)

## திருமதி திருப்பதி முத்து

தெல்லுளுவை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நல்லதம்பி இலட்சுமிப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திருப்பதியின் (வன திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாபதி (மதுவரி திணைக்களம்), பூரணம், ஞானரத்தினம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தா, சுகாதாரத் திணைக்களம்), நேசரத்தினம், காலஞ்சென்ற தாமரத்தினம், விஜயரத்தினம், செல்வரத்தினம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி வலயம்), தவரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற இராசமலர், காலஞ்சென்ற தர்மராசா (நிதி உதவியாளர், கல்வித் திணைக்களம்), சாரதாதேவி, தவமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (08.10.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தெல்லுளுவை,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
வே.தி.செல்வரத்தினம்
(மகன்)

(C/18583)

# தலிபானுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது என்கிறார் புஷ்

## தாக்குதல் விரைவில் நடக்கலாம்

வாஷிங்ரன்,ஒக்.8

பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்த, ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான்களுக்கு போதுமான அவகாசம் வழங்கப்பட்டுவிட்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தளம் அமைத்துச் செயற்படும் தீவிரவாதிகள் அனைவரையும், அமெரிக்காவிடமோ அல்லது சர்வதேச அமைப்பு ஒன்றிடமோ விசாரணைக்காக ஒப்படைக்கவும் -

அவர்களது முகாம்களையும் பயிற்சித் தளங்களையும் மூடுவதற்கும் -

தலிபான் ஆட்சிக்கு போதுமான வாய்ப்புகளும், கால அவகாசமும் தரப்பட்டு விட்டதாக அதிபர் புஷ் தெரிவித்தார்.

காம்ப்டேவிட்டிலிருந்து வானொலி மூலம் ஆற்றிய உரையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

வளைகுடா நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுவிட்டு நாடு திரும்பிய, பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட்டைச் சந்தித்துப்பேசிய பின்னரே அதிபர் புஷ் இவ்வாறு கூறினார்.

அமெரிக்கா நடத்த உத்தேசித்துள்ள போர் ஆப்கானிஸ்தானிய மக்களுக்கோ, இஸ்லாமிய மதத்துக்கோ எதிரானது இல்லை என்பதை புஷ் அப்போது வலியுறுத்தினார்.

வறுமையில் வாடும் ஆப்கான் மக்களிடம் அமெரிக்கா பரிவுகொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதிபர் புஷ்ஷின் உரை, ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலை விரைவில் அமெரிக்கா தொடங்குமென்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (ஒ)

# சோமாலியாவுக்கு தப்பிச் செல்ல ஒஸாமா பின்லேடன் திட்டம்

## அமெரிக்கப் பத்திரிகை தகவல்

நியூயோர்க்,ஒக்.8

ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருந்து ஆபிரிக்க நாடான சோமாலியாவுக்குத் தப்பிச்செல்வதற்கு திட்டமிட்டுவருவதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவுடனான எல்லைப் பகுதியில் உள்ள பாமிர் மலைப் பகுதியில் பின்லேடன் பதுங்கி இருப்பதாக ரஷ்ய உளவுத்துறை தகவல் வெளியிட்ட ஓரிரு தினங்களில் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

பின்லேடன் மறைந்திருக்கும் இடத்தினை அமெரிக்கப் படைகள் எந்த நேரத்திலும் ஏவுகணைத் தாக்குதல் மூலம் நிர்மூலமாக்கும் சாத்தியங்கள் இருப்பதனால், பின்லேடன் அங்கிருந்து தப்பிச் சென்று சோமாலியக் காடுகளில் மறைந்து கொள்ளத் தயாராகிவிட்டதாகவும் -

அவரும் அவரது அல்கைதா அமைப்பினரும் தப்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளில் மும்முரமாக உள்ளதாகவும் -

தான் சோமாலியா செல்வதற்கு முன்னர் தனது அமைப்பின் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கப்பல் மூலம் அவர் அந்த நாட்டுக்கு அனுப்பிவிட்டதாகவும் -

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# அமெரிக்கப் படைகளுக்கு உதவ ஜப்பானிய இராணுவத்துக்கு அனுமதி

## அமைச்சரவை வழங்கியது

டோக்கியோ,ஒக்.8

அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலுக்குப் பதிலடியாக அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தினால் அதற்கு ஜப்பானிய இராணுவம் நேரடி உதவிகளை வழங்குவது குறித்த சர்ச்சைக்குரிய பிரேரணை ஒன்றுக்கு ஜப்பானிய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்தப் பிரேரணை குறித்தும் ஜப்பானிய இராணுவம் அமெரிக்க இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்தும் ஜப்பானில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் அமைச்சரவை இதற்கு அனுமதி அளித்துள்ளமை அங்கு மேலும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது.

இதேவேளை -

ஆப்கானிஸ்தானில் மனிதப் பேரழிவைத் தடுக்கும் வகையில் ஐ.நா. கோரிக்கை விடுத்த 58 கோடி டொலர் நிதி உதவிக்கு ஜப்பான் சார்பில் 20 சதவீத நிதி உதவியை வழங்குவதற்கும் -

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் அகதிகளுக்கு வழங்குவதற்கான நிவாரணப் பொருள்கள் அடங்கிய 6 இராணுவ விமானங்களைப் பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்கும் -

தனது அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாகவும் ஜப்பானியப் பிரதமர் ஜுனி ஹிரோ ஹெய்ய்சூமி தெரிவித்தார்.

நிவாரணப் பொருள்களை பாகிஸ்தானுக்கு அனுப்பும் நடவடிக்கை ஒரு வாரத்துக்கு நடைபெற உள்ளது. இந்தப் பணியில் ஜப்பானிய வான் பாதுகாப்புப் படையணி தனது 200 வீரர்களை ஈடுபடுத்தவுள்ளது. (ம)

# காபூல் வானில் பறந்த விமானம் மீது தலிபான்கள் ஏவுகணைத் தாக்குதல்

இஸ்லாமபாத்,ஒக்.8

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மீது நேற்றுமுன்தினம் பறந்த விமானம் ஒன்றின் மீது தலிபான்கள் விமான எதிர்ப்பு ஏவுகணையைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தானியப் பத்திரிகையான 'டொன்' நேற்றுச் செய்தி வெளியிட்டது.

காபூல் மீது பறந்து கொண்டிருந்த விமானத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படுவது மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவது ஆகிய காட்சிகள் தொலைக் காட்சிகளில் காண்பிக்கப்படுவதாகவும் 'டொன்' தெரிவித்தது.

அந்த விமானம், அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமானதென்று தலிபான்கள் கூறியுள்ளபோதும், அந்த விமானத்தின் அடையாளம் எதனையும் அவர்கள் தெரிவிக்கவில்லை.

அமெரிக்கத் தாக்குதலை எதிர்நோக்கத் தொடங்கிய பின்னர் ஆப்கான் மீது பறந்த விமானம் ஒன்றின் மீது ஏவுகணையைக் கொண்டு தலிபான்கள் தாக்குதல் நடத்தியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த இரு வாரங்களின் முன்னர் ஆப்கானிஸ்தானிய வான்பரப்பில் பறந்த அமெரிக்க ஆளில்லாத உளவு விமானத்தை தலிபான்கள் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியது தெரிந்ததே. (ஒ-4)

# தற்கொலைத் தாக்குதலில் சவூதியில் 2அமெரிக்கர் பலி!

ரியாத்,ஒக்.8

சவூதி அரேபியாவில் நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இரு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

வர்த்தக நகரான செளவ்வியில் நேற்றுப் பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

பிரதான வீதியில் உள்ள கடை ஒன்றில் பொருள்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அமெரிக்கர்கள் அருகில் வந்த ஒருவர் அவரது உடலில் கட்டப்பட்டிருந்த குண்டை வெடிக்க வைத்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சவூதி அரேபியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த இரு வீரர்களே கொல்லப்பட்டதாகவும் -

தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் - அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

# ஆப்கான் மக்களுக்கு உதவ 60 கோடி டொலர் ஒதுக்கீடு

## ஜெனீவா மாநாட்டில் ஒப்பந்தம்

ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படுவதில் நிலவும் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கு 600 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான உதவிகள் வழங்க வளர்ந்த நாடுகள் ஒப்புக்கொண்டன.

சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் வளர்ந்த நாடுகளின் பிரதிநிதிகளும் தொண்டு அமைப்புகளும் கலந்துகொண்ட இரண்டு நாள் கூட்டத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் இதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் வாழும் மக்களில் 25 சதவீதமான சுமார் 60 லட்சம் மக்களுக்கு உடனடி அவசர உதவிகள் தேவைப்படும் நிலையில் இந்த ஒப்பந்தம் பயனுள்ளதாகும் என்று தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் நெருக்கடி நிலை ஏற்பட்டால் உதவியளிப்பதற்காக உருவாக்கப்பட்ட 24 நாடுகளின் அமைப்பு எட்டியுள்ள இந்த ஒப்பந்தத்தில் -

ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான உதவிகளுக்காக 60 கோடி டொலர்களை ஒதுக்குவதாகவும் -

அதில் சுமார் 18 கோடி டொலர்கள் ஐ.நா. சபை, ஆப்கானிஸ்தானில் ஆரம்பித்துள்ள அவசர நிவாரண உதவிகளுக்கு வழங்குவதாகவும் -

சுமார் 2.8 கோடி டொலர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உட்பட அரசசார்பற்ற நிவாரணங்கள் ஊடான உதவிகளுக்கு சென்றடையும் என்றும் - குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 40 கோடி டொலர்கள் எவ்வாறு வழங்குவது என்பது திட்டமிடப்படவில்லை.

இந்தத் தொகையை உதவி வழங்கும் நாடுகள் நேரடியாக குறிப்பிட்ட உதவித் திட்டங்களுக்கு வழங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

ஆப்கானிஸ்தான் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையின் போது அங்கிருந்து வெளியேறும் அகதிகளை, ஈரான் மற்றும் பாகிஸ்தான் ஏற்றுக்கொள்வதற்கு அந்த இரு நாடுகளின் சம்மதத்தைப் பெற்றிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பு (யு.என்.எச்.சி.ஆர்.) தெரிவித்துள்ளது. (ஒ-4)

## அமெரிக்க ஆதரவு மாநாட்டின் போது

# முன்னாள் கம்யூனிஸத் தலைவர்களை கொல்ல முயற்சித்த நபர் கைது!

முன்னாள் கம்யூனிஸ நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இயந்திரத் துப்பாக்கியுடன் பிரவேசிக்க முயன்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பல்கேரியாவில் சோபியா ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்களைக் கொல்வதற்காகவே இந்த நபர் வந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பல்கேரியா, லிதுவேனியா, லட்ரியா, எஸ்ஸ்டோனியா, ஸ்லோவேக்கியா, ஸ்லோவேனியா, ரொமேனியா, குரோஷியா, மஸிடோனியா, அல்பேனியா ஆகிய நாடுகளின் தலைவர்களே இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கம்யூனிஸ சிந்தனைகளிலிருந்து விடுபட்டுத் தற்போது ஜனநாயக சித்தாந்தங்களைப் பின்பற்றும் இந்தப் பத்து நாடுகளும், பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்க நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதுடன், 'நேட்டோ' அமைப்பில் சேரவும் முயற்சித்து வருகின்றன.

# பலஸ்தீனரின் ஹெப்ரான் நகரை இஸ்ரேலியப் படை ஆக்கிரமிப்பு

காஸா,ஒக்.8

பலஸ்தீனக் கட்டுப்பாட்டு நகரான ஹெப்ரானை கடந்த வெள்ளிக்கிழமை இரவு இஸ்ரேலியப் படைகள் கைப்பற்றியது.

டாங்கிகள் சகிதம் மேற்குக் கரை நகரான ஹெப்ரானுக்குள் புகுந்த இஸ்ரேலியப் படைகள், 5 பலஸ்தீனர்களைக் கொன்றதுடன், சுமார் 50பேர்வரை காயப்படுத்தியதாகவும் பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

பலஸ்தீனக் கட்டுப்பாட்டில் உள்ள அபுசினெய்னா பகுதியில், யூதர்களின் வணக்கத்துக்குரிய கல்லறை ஒன்றில் வழிபட்டுக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் மீது பலஸ்தீனத் தீவிரவாதிகள் இரு நாள்களின் முன்னர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பதிலடியாகவே இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறியது.

ஹெப்ரானுக்குள் நுழைந்த இஸ்ரேலியப் படைகள், பலஸ்தீனர்களை வீடுகளில் இருந்து வெளியேற்றிவிட்டு அவற்றில் முகாம் அமைத்ததாகவும் -

அதனையடுத்து பலத்த மோதல்கள் வெடித்ததாகவும் -

செய்தித் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் தலைவர்களிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வாரமே ஆகியுள்ள நிலையில் தற்போதைய சம்பவம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## ஐ.நா. அமைப்பு வேண்டுகோள்

உலகளாவிய ரீதியில் அனைத்து விமானநிலையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்தும்படி, அந்தந்த நாடுகளை ஐ.நா. சிவில் விமானப் போக்குவரத்துச் சபை கேட்டுள்ளது.

அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதலை அடுத்து 187 நாடுகள் அங்கம் வகிக்கும் சிவில் விமானப் போக்குவரத்துச் சபையின் 33ஆவது மாநாடு சமீபத்தில் இடம்பெற்றபோதே இந்த வேண்டுகோள் விடப்பட்டது.




## சென்னை அருகே செங்குன்றத்தில்

# விஷச்சாராயம் அருந்தியவர்களில் இருபத்தேழு பேர் உயிரிழந்தனர்!

சென்னை,ஒக்.8

தமிழகத்தின் சென்னை அருகே உள்ள திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றத்தில் நேற்று முன்தினம் கள்ளச் சாராயம அருந்தியவர்களில் 27பேர் உயிரிழந்தனர்; மேலும் 52 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளி இரவு இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கள்ளச்சாராயம் விநியோகிக்கப்பட்டது. அதனை அருந்தியவர்களில் 10 பேர் நேற்று முன்தினம் காலை படுக்கையிலேயே இறந்துகிடந்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 17 பேர் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளனர். தற்போது கள்ளச்சாரயத்தால் பாதிக்கப்பட்ட 52 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

கள்ளச்சாராயம் விற்றதாகக் கூறப்படும் தாயையும் மகனையும் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஒ)

## பிரான்ஸில் 4 பேர் கைது!

பாரீஸ்,ஒக்.8

இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் 4 பேரை பிரெஞ்சுப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

அல்ஜீரிய இஸ்லாமிய ஆயுதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறியே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

## வலயத்துக்குள்ளும், வலயங்களுக்கு இடையேயும்

# அடுத்த ஆண்டு இடமாற்றத்துக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக். 8

அடுத்த ஆண்டில் கல்வி வலயத்துக்குள்ளும், வலயங்களுக்கு இடையிலும் மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரிய இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலயத்துக்குள்ளே இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னரும்--

வலயங்களுக்கு இடையில் (மாவட்டத்துக்குள்) இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்கள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு இடையிலும்—

தற்போது தாம் கற்பிக்கும் பாடசாலை அதிபர், கல்விக் கோட்டத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும்— அறிவிக்கப்பட்டுள்ளது.

53 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள், கஷ்டப்பிரதேசங்களில் தொடர்ச்சியாகக் கடமை புரிந்தவர்கள், வசதியான பிரதேசங்களில் 6 வருடங்களுக்கு மேல் கடமை புரிந்தவர்கள், வைத்திய நிபுணர்களின் சிபார்சுடன் கூடிய வைத்தியக் காரணம் சமர்ப்பிப்போர், பாதுகாப்புப்படையில் பணியாற்றுவோரின் கணவன் அல்லது மனைவியர் இடமாற்றத்தில் முன்னுரிமை பெறுவர்.

மாகாண மட்டத்திலும், மாகாணத்துக்கு வெளியேயும் இடமாற்றம் கோருவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டிருந்தமை தெரிந்ததே. (க-7-11)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் வலய யாழ்ப்பாணம் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் 16, 18 வயதுப் பிரிவினர் பங்குபற்றும் அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் வலயக் கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு உரும்பிராய்இந்துக்கல்லூரி மைதானத்தில் 16, 18 வயதுக்கு உட்பட்டோருக்கான கால் இறுதி ஆட்டங்கள் இடம்பெற உள்ளன. (க-86)

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம், பாடசாலைகளுக்கிடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின்விவரம் வருமாறு:

★ மாலை 4 மணி—கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

★ மாலை 4.45 மணி—சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி. (—3)

# குடாநாட்டில் திராட்சையின் விலையில் பெருமளவு வீழ்ச்சி

## வெட்டுப் போகத்தில் மருந்து வேண்டாம்

யாழ்ப்பாணம்,ஒக் 8

குடாநாட்டில் திராட்சையின் விலையில் திடீரென ஏற்பட்ட சரிவினால் திராட்சைச் செய்கையாளர்கள் மிகவும் நஷ்டமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிலோ ஒன்று 60—70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த திராட்சை, தற்போது 30—35 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது

தற்போது வெட்டுப் போகம் ஆரம்பித்திருப்பதைத் தொடர்ந்து அதிகளவு திராட்சைப் பழங்கள் சந்தைக்கு வந்ததாலேயே இந்த விலைச்சரிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அதே வேளை—

வெட்டுப்போகம் நெருங்கிய பின்பும் விவசாயிகள் அதிகளவான கிருமிநாசினிகள் விசிறி வருவதால் திராட்சைப் பழங்களில் வெள்ளை நிற மருந்துப் படிவுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு மருந்துப் படிவுகள் உள்ள திராட்சைப் பழங்களை உண்பதால் உடலுக்கு மிகவும் தீங்கு ஏற்படும் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை—

வெட்டுப் போகம் நெருங்கும் காலத்தில் திராட்சைச் செடிகளுக்கு கிருமிநாசினி அவசியமற்றது எனவும்—

இது தொடர்பாக விவசாயிகளுக்கு போதிய விளக்கம் இல்லாததனாலேயே அவர்கள் கண்டபடி மருந்துகளை விசிறுகின்றனர் எனவும்—

விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (க-4)

# மகத்தான ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும்

## உலக ஆசிரியர் தின நிகழ்வில் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், ஒக். 8

ஆசிரியப்பணி மகத்தானது. அந்தப் பணியை அனைவரும் அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். மாணவர்களை நல்வழிப்படுத்தும் பெரும் பொறுப்பும் ஆசிரியர்களையே சார்ந்தது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளைகள் இணைந்து யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்திய உலக ஆசிரியர் தினவிழாவில் உரையாற்றிய தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தவர்கள் என்று எல்லோருமே தினம் தினம் வாழ்த்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். இன்றைய ஆசிரியர் தினத்தில் விசேடமாக வாழ்த்துகிறோம் அவ்வளவு தான்..ஆசிரிய சமூகமானது மாணவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். அது ஆசிரியர்களின் கடமையும் ஆகும் என்று குறிப்பிட்டார்.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் மட்டுமல்ல முழு உலகிலுமே எல்லோரும் பல வகையான தொழில்களைப் புரிந்து வருகின்றபோதும் ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் தனியான ஒரு தினம் கொண்டாடப்படுகிறது. ஆசிரியப் பணி புனிதமான ஒரு பணியாக இருப்பதே அதற்குக் காரணம். ஆசிரியர்களைப் புகழ்வதற்கும், போற்றுவதற்கும், வாழ்த்துவதற்கும் யாரும் பின்நிற்பதில்லை.

ஆசிரியத் தொழிலானது நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் வேறுபட்டதல்ல தமது பணி எப்படி இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு ஆசிரியர்களும் உணர்ந்து நடக்க வேண்டும்.

பெற்றோர்களைவிட ஆசிரியர்களாலேயே ஒரு மாணவனை நல்வழிப்படுத்த முடியும். அதுபோன்ற நல்லதொரு சமூகத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய பணியும் ஆசிரியர்களுக்கு உண்டு. ஆசிரியர்களாகிய நீங்கள் மாணவர்களை நல்வழிப்படுத்தினால் அதுவே சமூகத்துக்குச் செய்கின்ற நன்றிக்கடனாக இருக்கும் — என்றார்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி தமதுரையில்:-

உலகத்தில் எத்தனை தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் ஆசிரியப் பணியை மழுங்கடித்துவிட முடியாது. இந்த உலகையே முன்னேற்றி வைத்த ஏணிகள் ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டார்.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தனதுரையில்:

இலங்கையில் லலித்அத்துலத்முதலி கல்வி அமைச்சராக இருந்த கால கட்டத்தில் எமது நாட்டிலும் உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று அதனை ஆரம்பித்து வைத்தார். உண்மையிலேயே உலக ஆசிரியர் தினம் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதியே ஆகும். இங்கு அது ஒக்ரோபர் 6 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் 5 ஆம் திகதியே கொண்டாடவுள்ளோம்என்றுதெரிவித்தார்

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கென இணையத்தளம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு கொடி விற்பனையின் மூலம் நிதியும் சேகரிக்கப்பட்டது. (க-10)

# கோப்பாய்பகுதியில் திருட்டுகளில் ஈடுபட்ட குழுவினர் சிக்கினர்!

## ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்

கோப்பாய்ப் பகுதியில் அண்மைக்காலத்தில் அடுத்தடுத்து பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் குழுவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வகையாக மாட்டிக்கொண்டனர்.

திருட்டு முயற்சியொன்றில் ஈடுபட்டிருந்த சமயம் பொதுமக்களால் இந்தக் குழுவினர் துரத்திப் பிடிக்கப்பட்டனர்.

இந்தக் குழுவில் 10 வயதுச் சிறுவனும் 65 வயதுடைய முதியவரும் காணப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து திருடப்பட்ட பொருள்கள் மற்றும் இரும்புப்பட்டம், முகமூடி, கூரிய ஆயுதம் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களைப் பிடித்த பொதுமக்கள் (விழிப்புக்குழு) கண்ணகை அம்மன் வாசிகசாலையில் பார்வைக்காக நிறுத்திய பின் மானிப்பாய் வீதி வழியாக ஊர்வலமாக கோப்பாய் சந்திவரை திருடப்

(9ஆம் பக்கம் பார்க்க)


NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2001 பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு அலகு ரீதியான துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

- பௌதிகவியல் -

திரு. கருணாநிதி B.Sc.(SPL)

ஆரம்பம்! 10-10-2001 புதன் காலை 6.00 மணி

( வகுப்பு: திங்கள், புதன், வெள்ளி காலை 6.00 மணி )

(93169)


## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா திருநாவுக்கரசு

(வட. இலங்கை சர்வோதய அமைப்பாளர், அறங்காவலர்)

மக்கள் பணிக்கும் சமயப் பணிக்கும் தன்னையே அர்ப்பணித்த தியாகசீலன்

**அண்ணன் திருநாவுக்கரசு**

அவர்களின் திடீர் மறைவு கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவரின் பணி தொடரவும் பெருங்காடு கிராஞ்சிபம்பதி முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்.**

(93172)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகநாதன் கஜேந்திரன் (றவித்தா)

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சண்முகநாதன் கஜேந்திரன் நேற்று (07-10-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகநாதன் - தங்கபூபதி தம்பதியினரின் அன்பு மகனும், விஜேந்திரன் (விஜே இன்டஸ்றீஸ்), குலேந்திரன் (பபா), தவேந்திரன் (தம்பி), விஜயசொரூபி (டோட்டி), உதயசொரூபி (செலானி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசக்தி, விஜயராணி, அம்பாலிகா, அரவிந்தன் ஆகியோரின் மைத்துனரும், லோகிதாச்சுதன், சோபிதாச்சுதன், விதுசா, ரூபிஜா ஆகியோரின் சித்தப்பாவும், ஜெரூஷாவின் ஆசையப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(8-10-2001) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சி. சண்முகநாதன் (தந்தை)

பண்டத்தரிப்பு. (93170)

### திருமதி முருகேசு அரியமலர்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு அரியமலர் 05-10-2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசுவின் (3 ஆம் குறுக்குத் தெரு. கொழும்பு-11) அன்பு மனைவியும் கலாஜோதி (பிரான்ஸ்), மாலாஜோதி (பிரான்ஸ்), ஜோதிமனோகர் (லண்டன்), ஜோதிக்குமார், ஜோதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசுவின் சகோதரியும் நகுலநாதன் (பிரான்ஸ்), குணராஜா (பிரான்ஸ்), சசிகலா, வதனா ஆகியோரின் மாமியாரும் சிரஞ்ஜீவ், நர்மதா, நிராஜ், சுரேனா, நிகிந்தா, சஜீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-

ஜோதிக்குமார் (மகன்)

674, பருத்தித்துறை வீதி, (சந்தியா மல்ரி கோட்பாட்)

நல்லூர். (93166)

உதயன்

## தமிழ்க் கட்சிகள் விளக்கம் தரத் தயாரா?

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு இலங்கைத் தமிழர்களின் சார்பில் நியமிக்கப்படப்போகின்றவர் யார் என்பது இன்று தீர்மானிக்கப்பட வேண்டும்.

இதுவிடயத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களிடையே இணக்கம் ஏற்படாததால் பிரச்சினை இழுபறிபட்டுக் கொண்டுபோகின்றது.

ஓர் உயர் சபைக்குப் பிரதிநிதியைத் தெரிவுசெய்வதில் எம்.பிக்களிடையே கருத்துவேறுபாடு ஏற்படுவதை வைத்து, தமிழ் எம்.பிக்களிடையே ஒற்றுமை இல்லை என்றோ அல்லது இப்படித்தான் ஒரு விடயத்தைச் சேர்ந்து - இணங்கி - இவர்களால் செய்யமுடியாது என்றோ வெளியிலிருந்து விமர்சித்துவிட்டு அடங்கிவிட முடியாது. இந்த நியமனத்துக்குப் பொறுப்பேற்கப் போகின்ற தமிழ் எம்.பிக்கள், பிரேரிக்கப்படுகின்ற பெயர்களுக்குரிய ஒவ்வொரு நபர் குறித்தும் - அவரது திறமை, திறமையின்மை குறித்தும் - அவரது தகுதி, தகுதியீனங்கள் குறித்தும் - சீர்தூக்கிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப் பார்க்கின்றபோது ஒருவருக்குத் தெரியாத விடயம் இன்னொருவருக்குத் தெரியவரலாம். அதனால் ஒரே பிரமுகர் குறித்து இரண்டு எம்.பிக்களுக்கு வெவ்வேறு அபிப்பிராயங்கள் ஏற்படலாம். அது தவிர்க்கமுடியாதது.

எனவே அனைத்துத் தமிழ் எம்.பிக்களும் - கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று - ஒன்றாக அமர்ந்து, கலந்துபேசி, சாதக பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஓர் இணக்கத்துக்கு வரலாம்; வரவேண்டும்.

அதைவிடுத்து, நாங்கள் முடிவு செய்வதை அடுத்த கட்சி எம்.பிக்கள் ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பதோ -

கட்சி வேறுபாடுகளை மட்டும் கருத்தில் கொண்டு வீம்புத்தனம் காட்டுவதோ -

சரியான பிரமுகர் ஒருவரை இந்த உறுப்பினர் பதவிக்கு நியமிப்பதற்கு வாய்ப்பளிக்கப்போவதில்லை.

அதேசமயம் -

தமிழ் எம்.பிக்களும் தங்களுக்குள் உடன்பாடு ஒன்று ஏற்படாதவிடத்து - இணக்கம் ஒன்று எட்டப்பட முடியாதவிடத்து - ஜனநாயக முறையில் பெரும்பான்மையினரின் முடிவை ஏற்க முன்வரவேண்டும்.

அத்தோடு -

தமிழ் எம்.பிக்களிடையே இணக்கம் ஏற்படாவிட்டால், பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் தங்களுக்குள் இணைந்து தமிழர் பிரதிநிதியாக ஒருவரைத் தெரிவுசெய்வர் என்று நாடாளுமன்றத் தரப்பில் விடுக்கப்பட்டுள்ள சவாலை - எச்சரிக்கையை - ஒருமுகமாக எதிர்கொள்ளவேண்டும். தமிழ் எம்.பிக்களுக்குள் உள்ள கருத்து வேறுபாட்டைப் பயன்படுத்தி, அரசமைப்புக் கவுன்ஸிலுக்குப் பத்தில் ஓர் உறுப்பினரைத் தெரிவுசெய்யும் அதிகாரத்தைக் கூடச் சிங்களப் பேரினவாதம் தமிழர்களிடமிருந்து பறிக்கும் அடாவடித்தனத்துக்கு - அல்லது அத்தகைய மிரட்டலுக்கு - எதிராகக் கிளர்ந்தெழுந்து மோத முன்வரவேண்டும்; இது விடயத்திலாவது தமிழ் எம்.பிக்கள் கட்சி வேறுபாட்டுக்கு அப்பால் நின்று ஒருங்கிணைந்து குரல்கொடுக்கத் தயாராக வேண்டும். தமிழர்களின் அடிப்படை உரிமையில் கைவைக்கும் இத்தகைய வீம்புத்தனத்துக்கு இடமேயளிக்கக் கூடாது என்பதில் எமது எம்.பிக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

மேலும், சிறுபான்மைக் கட்சிகளின் சார்பிலும் தமிழர் ஒருவர் அரசமைப்புக் கவுன்ஸிலுக்குத் தெரிவு செய்யப்படுவதற்குக் கிடைத்த வாய்ப்பைத் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து பேரினவாத ஜே.வி.பிக்கும், சிஹல உறுமயவுக்கும் தாரைவார்த்து விட்டதாக ஐ.தே.கட்சியின் எம்.பியான மகேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழ் மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் இதுவிடயத்தில் தங்கள் நிலைமையைத் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டவை. அதைச் செய்ய அக்கட்சிகள் முன்வருமா?

# இணையத் தள நிதிக்காக இன்றுமுதல் கொடிவாரம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.8

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளில் இன்றுமுதல் ஒருவாரகாலத்துக்குக் கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது சர்வதேச ரீதியிலான தொடர்புகளுக்கென இணையத் தளம் ஒன்றை புதிதாக உருவாக்கவுள்ளது என்றும் -

இந்த இணையத் தளத்தின் உருவாக்கத்துக்கு நிதி சேகரிக்கும் வகையில் கொடிவாரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றும் -

சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கடந்த வெள்ளியன்று வட. இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வைபவத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான சி.சிவராசா முதல்கொடியைப் பெற்று கொடிவாரத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதேதினத்தன்று யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் யாழ்ப்பாணம், தீவகம் ஆகியவற்றின் கல்விப் பணிப்பாளர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் ஓய்வுபெற்ற சங்க நிர்வாகிகளும் கொடிகளைப் பெற்றுக்கொண்டனர் என சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (க-7)

## நாட்டு நடப்பு

பல்கலை வளாகம் முட்ட
பல்லாயிர மாய் மக்கள் கூட
எல்லையில் இன்பம் சொட்ட
இணைந் தொன்றாய்ப் பட்டம் சூட்ட
மெல்லென இருள்கவிந்து முட்ட
மாமழை கொட்டு மென்ன
பொல்லாத இருள் விரட்ட
பொலிவுற கதிரோன் வந்தான்
நல்லதோர் சேவை செய்யின்
நாளுமே இறைவன் காப்பான்.

*- விகடகவி.*

## மோட்டரோலா தொலைபேசிப் பாவனையாளர்கள்

# சூரிய மின்கலத்துக்கான 60 வீத கட்டணத்தை கட்டியே தீரவேண்டும் என்கிறது ரெலிகொம்

## 3 மாத கால அவகாசம் தரலாம் என்கிறார் பொதுமுகாமையாளர்

யாழ்ப்பாணம்,ஒக்.8

'மோட்டரோலா' பாவனையாளர்களுக்கு 'ரெலிகொம்' நிறுவனம் வழங்கிய சூரியசக்தி மின்கலத்துக்கான கட்டணத்தில் 30 முதல் 40 வீதத்தைக் குறைப்பதாகவும் -

கட்டணத்தில் எஞ்சிய 60 வீதத்தை 3 மாதத் தவணையில் செலுத்தும்படியும் -

ரெலிகொம் நிறுவன வடபிராந்திய பொதுமுகாமையாளர் எஸ்.கனகசூரியர் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்பஸ்தியான் ஹோட்டலில் இடம்பெற்ற 'ரெலிகொம்' வாடிக்கையாளர் சந்திப்பின் போது இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

1998ஆம் ஆண்டு 'மோட்டரோலா' இணைப்பைப்பெற்ற ஒருவர் 98-99ஆம் ஆண்டு காலப் பகுதிக்குச் சூரிய மின்கலத்துக்கான கட்டணமாக 24 ஆயிரத்து 490 ரூபாவைச் செலுத்தியதாகவும் -

அந்த வாடிக்கையாளர் 1999-2000 காலப்பகுதிக்கான மின்கலக் கட்டணமாக மேற்கூறிய தொகையில் 60 சதவீதத்தை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னதாக, மூன்று தவணைகளிலாவது செலுத்திவிடும்படியும் -

வாடிக்கையாளரின் நலன்கருதி, முழுத்தொகையில் 30 முதல் 40 சதவீதத்தைக் குறைப்பதற்கு வழிசெய்வதாகத் தாங்கள் உறுதியளிப்பதாகவும் -

எஸ்.கனகசூரியர் தெரிவித்தார்.

குடாநாட்டில் பாதுகாப்பு ஸ்திர நிலை அற்ற சூழ்நிலையில், பணப்பற்றாக்குறை நிலவும்போதும் வாடிக்கையாளர்களுக்கு ரெலிகொம் நிறுவனம் தன்னாலியன்ற வகையில் சேவையாற்றிவருவதாகத் தெரிவித்த அவர், இதை மனதிற்கொண்டு, சூரிய மின்கலத்துக்கான கட்டணத்தைச் செலுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

2000-2001 ஆண்டு காலப் பகுதிக்கான கட்டணத்தை அடுத்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதகாலப் பகுதியில் செலுத்த அவகாசம் வழங்குவதாகவும் கனகசூரியர் மேலும் தெரிவித்தார்.

'மோட்டரோலா" பாவனையாளர் சங்கம், யாழ்.மாவட்டத் தொலைத்தொடர்பாளர் ஒன்றியம், வடமராட்சித் தொலைபேசிப் பாவனையாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் வாடிக்கையாளர்களும், 'ரெலிகொம்' நிறுவன அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொணடனர். அப்போது ரெலிகொம் நிறுவன வடபிராந்திய பொதுமுகாமையாளர் எஸ்.கனகசூரியர் பேசும் போது -

### இடர்பாடுகளுக்கு மத்தியில் சேவை

'பல சிரமங்களின், இடர்பாடுகளின் மத்தியில் குடாநாட்டு மக்களுக்குத் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்கு ரெலிகொம் நிறுவனம் முன்வந்தது. போதுமான, பயிற்சியுள்ள ஊழியர்கள் இல்லாதிருந்தபோதும், இருப்பவர்களைக்கொண்டு தரமான சேவையை ரெலிகொம் வழங்கி வருகிறது. தற்போது குடாநாட்டில் சகல தேவைகளையும் பூர்த்திசெய்து, இடையூறு அற்ற தொலைபேசிச் சேவையை வழங்க சுமார் 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது.

ஆனால் அரசுடன் இணைந்து ரெலிகொம் நிறுவனத்தை இயக்கும ஜப்பானிய நிறுவனம், முதலீட்டை மீளப்பெற உத்தரவாதமற்ற சூழ்நிலையில் பெருந்தொகையை முதலிடுவதற்குத் தயங்குகிறது.

ஆகவே, குடாநாட்டில் வாடிக்கையாளர் செலுத்தும் பல்வேறு கட்டணங்களுடன், கிடைக்கும் முதலீட்டுத் தொகையைச் சேர்த்துப் பயன்படுத்தியே குடாநாட்டுக்கான தொலைபேசிச் சேவைகளை மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

### குறைபாடுகள் குறித்து பிரதிநிதிகள் விவரிப்பு

அதைத்தொடர்ந்து பேசிய தொலைபேசிப் பாவனையாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள், தமது குறைகளைத் தெரிவித்தனர். 'மோட்டரோலா' இணைப்புகளில் பரிவர்த்தனை நிலையம் மூலம் 074, 077 ஆகிய இலக்கங்களில் தொடங்கும் தொலைபேசித் தொடர்புகள் கிடைப்பதில்லை. தொலைதூர இடங்களில் இருப்பவர்கள் தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்த யாழ்ப்பாணம் வருவதற்குப் பதிலாக, அந்தந்த இடங்களிலேயே செலுத்த வகை செய்யவேண்டும். தொடர்பில் ஏற்படும் பழுதுகளை நீக்குவதிலும், தொடர்பு சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரின் உபகரணங்களைப் பராமரிப்பதிலும் ரெலிகொம் ஊழியர்கள் மேலும் கூடிய அக்கறை காட்டவேண்டும் என்பன உட்படப் பல குறைகள் எடுத்துரைக்கப்பட்டன.

அத்துடன், ஆனையிறவுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து 3 மாதங்கள் தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்த தொலைபேசித் தொடர்பு பின்னர் செயற்படத் தொடங்கிய போது ஒரேதடவையில் முழுக் கட்டணங்களையும் செலுத்தும்படி நிர்ப்பந்திகக்கப்பட்டதால், தாம் பண நெருக்கடியில் சிக்கியதாகவும் -

### 602 ரூபா கட்டணம் அறவீடுவது முறையல்ல

அந்தச் சமயத்தில் தொலைபேசித் தொடர்பு நிறுத்தப்பட்டதுக்குப் பாவனையாளர்கள் காரணமில்லாதபோதும், மீள இணைப்புப் பெற 602 ரூபா கட்டணம் அறவிடப்பட்டது தமக்கு அதிருப்தியளிப்பதாகவும் - தொலைபேசிப் பாவனையாளர் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாகக் கவனமெடுத்து, குறைகளை நிவர்த்தி செய்வதாக 'ரெலிகொம்' அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இதனையடுத்து 'மோட்டரோலா' பாவனையாளர் சங்கத் தலைவர், சூரிய மின்கலத்துக்கான கட்டணமாக சுமார் 75 ஆயிரம் ரூபாவை எவ்வித முன்னறிவித்தலும் இன்றி ரெலிகொம் நிறுவனம் விதித்திருப்பது குறித்து ஆட்சேபம் எழுப்பினார். மற்றைய சங்கங்களின் பிரதிநிதிகளும் இந்த ஆட்சேபத்தை ஆமோதித்தனர்.

குடாநாட்டில் 'மோட்டரோலா' இணைப்புகள் வழங்கப்பட்டபோது, சூரிய மின்கலத்தையும் பெறும்படி தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் -

அப்போது சூரிய மின்கலத்துக்காக அறவிடப்பட்ட 24 ஆயிரத்து 490 ரூபா மட்டுமே அதற்கான செலவு என்று பாவனையாளர்கள் நினைத்ததாகவும் -

ரெலிகொம் அதிகாரிகள் சிலர் கூட சூரிய மின்கலத்துக்கு மேலதிகத் தொகை எதுவும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

### முகாமையாளர் பதில்

இதற்குப் பதிலளித்த யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.அன்ரனிராசன், தொழில்நுட்ப ரீதியாக, 'மோட்டரோலா' உபகரணங்களுக்கு சூரிய மின்கலம் உபயோகிப்பதே பாதுகாபபானது என்பதால் - வாடிக்கையாளரின் நலன்கருதி சூரிய மின்கலம் பெற்றுக்கொள்ளும்படி அறிவுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதேசமயம், இணைப்புகள் பெறப்பட்டபோது, சூரிய மின்கலத்துக்கு மேலதிகக் கட்டணம் அறவிடப்படுமெனத் தெரிவிக்கப்படாதது 'ரெலிகொம்' நிறுவனத்தின் தவறுதான் என்று ஒப்புக்கொண்ட எஸ்.கனகசூரியர், சூரிய மின்கலத்துக்கு நிறுவனம் இட்ட முதலீட்டைத் திரும்பப் பெறும் நிர்ப்பந்தம் இருப்பதாகவும் கூறினார்.

விலை குறைந்த பிற உபகரணங்களுக்கு இடப்பட்ட முதலீட்டை மீளப்பெற நினைக்காத 'ரெலிகொம்' சூரிய மின்கலத்துக்கு மட்டும் முதலீட்டை மீளப் பெற நினைப்பது ஏன்? என பிரதிநிதிகள் கேள்வி எழுப்பின

அதற்குப் பதிலளித்த கனகசூரியர், சிறிய உபகரணங்களுக்கான முதலீடுகள் தொலைபேசி நிறுவுதல் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டதாகவும் - சூரிய மின்கலத்துக்கான கட்டணம் தனியாக அறவிடப்படுவதாகவும் - தெரிவித்தார்.

தொலைபேசி இணைப்புகள் முதன் முதலில் வழங்கப்பட்ட போது, சூரிய மின்கலத்துக்காக சுமார் 75ஆயிரம் ரூபா கட்டணம் கோரப்பட்டிருந்தால் பாவனையாளர்கள் செலுத்தியிருக்க மாட்டார்களா? என்று 'ரெலிகொம்' தரப்பினர் கேள்வியை முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த பாவனையாளர் ஒருவர் -

'மோட்டரோலா' இணைப்புக் கிடைத்த பின்னர் 3மாதங்கள் கழித்தே தனது தொடர்பில் சூரிய மின்கலம் பொருத்தப்பட்டதாகவும் -

இடைப்பட்ட காலத்தில், பத்தாயிரம் ரூபாவுக்கு இரு பற்றரிகளை வாங்கிப் பயன்படுத்தியபோது, தனக்குச் செலவு குறைவாகவே ஏற்பட்டதாகவும் - ஒவ்வொரு ஆண்டுகாலப் பகுதிக்கும் சுமார் 24ஆயிரம் வீதம் தொடர்ந்து செலுத்தவேண்டும் என்பது தெரிந்திருந்தால், சூரிய மின்கலத்துக்குப் பதிலாக, பற்றரியிலேயே தொலைபேசியைத் தொடர்ந்து தான் இயக்கியிருக்க முடியும் என்றும் - தெரிவித்தார்.

முன்கூட்டியே எதுவும் தெரிவிக்

(8ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



அவ்விடத்தை அடையாளப்படுத்திய பின்.....

## நாளை

புரட்டாதி 23
செவ்வாய்க்கிழமை
திதி : ஸப்தமி
முன்னிரவு 7.13 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
பின்னிரவு 2.04 வரை
மரணயோகம்
சுபநேரம்: 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பிறரின் புகழைக் கெடுத்துத் தன் புகழைப் பெருக்க முயற்சிப்பவன் இறுதியில் கெட்ட பெயரையே சம்பாதிக்கிறான்.

*- துளசிதாஸ்.*

# கலைத் துறையில் மிளிர்வதற்கு அங்கக் குறைபாடு தடையல்ல!

**அங்கக் குறைபாடுகள் கலை வளர்ச்சிக்கு, கலை ஆற்றல்களுக்கு ஒரு போதும் தடையாக இருக்கமாட்டா. அதற்கு மாறாக அது கலைகளுக்குப் புத்துணர்ச்சியையும், புதிய சாதனைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற தெம்பையே ஏற்படுத்துகின்றது.**

**- இவ்வாறு கூறுகிறார் மிருதங்க வித்துவான் கலாபூஷணம் பசுபதி இரத்தினம் செல்வராசா (வயது65)**

**ப.இ.செல்வராசா எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இவர், தனது இரண்டாவது வயதிலேயே இரண்டு கண்களினதும் பார்வையை இழந்தவர். எனினும் அங்கக் குறைபாடுகள் கலைவளர்ச்சிக்கும் - கலை ஈடுபாட்டுக்கும் தடையாக இருக்கமாட்டா என்பதை நிலை நாட்டும் நோக்குடன், பல்வேறு வசதியீனங்களின் மத்தியிலும் மிருதங்கக் கலையுலகில் பிரகாசித்தவர் - பிரகாசித்துக் கொண்டிருப்பவர்.**

**அது மட்டுமன்றி இவர் பெயரையோ, புகழையோ விரும்பாத உண்மைக் கலைஞனும் கூட. இத்தகைய பெருமை மிக்க கலைஞன் கலாபூஷணம் ப.இ.செல்வராசா 'கலைச்சுடர்' பகுதிக்கு வழங்கிய செவ்வியின் தொகுப்பு இது.**

1937ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி யாழ்.பிரதான வீதியில் - கன்னியர்மடத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் பிறந்த பசுபதி இரத்தினம் சிறுவயதிலேயே தாய், தந்தையரை இழந்து அநாதையானார். பின்னர் யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி (சென்.பற்றிக்ஸ் கல்லூரி) அதிபர் அருட்திரு லோங் அடிகளாரின் அரவணைப்பில் வாழ்ந்தார்.

இந்தக் காலமே ப.இ.செல்வராசாவின் கலை வாழ்க்கையைப் பொறுத்த வரையில் முக்கியமான காலமாகும். காரணம் அருட்திரு.லோங் அடிகளாரின் அரவணைப்பில் இருந்தபோதே பல மிருதங்க வித்துவான்களிடம் மிருதங்கக் கலையைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

இளமையிலேயே மிருதங்கக் கலைஞானம் உடைய செல்வராசா, இலங்கைக்கு - குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு - விஜயம் செய்திருந்த மிருதங்க வித்துவான் பாலக்காடு கே.பி.கிருஷ்ணஐயரை தனது முதல் ஆசானாகக் கொண்டு அவரிடம் மிருதங்கக் கலையைக் கற்றுக்கொண்டார். கே.பி.கிருஷ்ணஐயர் அவர்கள் நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் கதாப்பிரசங்கங்களுக்கு மிருதங்கம் வாசிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் யாழ்ப்பாணத்தில் தங்கி வசித்த இடம் 'கலைப்பூமி' என




வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை. கலையின்மீது அதிக ஈடுபாடு கொண்ட செல்வராசா யாழ்ப்பாணத்தில் இருந்து கால் நடையாக வட்டுக்கோட்டைக்குச் சென்று கிருஷ்ணஐயரிடம் மிருதங்கக் கலையைக் கற்றார்.

வறுமை என்பது கலைகளுடன் கூடிப் பிறந்ததென்பர். கலைஞன் ப.இ. செல்வராசாவையும் அதுவிட்டுவிடவில்லை. மூன்று நாள்களுக்கு சாப்பாட்டுக்கு என வழங்கப்பட்ட பணத்தைக் கொண்டு முதன்முதலாக மிருதங்கம் ஒன்றை இவர் வாங்கினார். அந்த நாள்கள் பட்டினியாகவே கழிந்தன.

கே.பி.கிருஷ்ணஐயர் இந்தியா திரும்பியதை அடுத்து யாழ்.டேவிற் வீதியில் வசித்த தம்பாப்பிள்ளை இரததினத்திடம் இவர் மிருதங்கக் கலையைக் கற்றுக்கொண்டார்.

பின்னர் 1968ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி யாழ்.மாநகர சபை மண்டபத்தில் ப.இ.செல்வராசாவின் மிருதங்க அரங்கேற்றம் மிகவும் கோலாகலமான முறையில் நடைபெற்றது. அளவெட்டியைச் சேர்ந்த மகாகவி உருத்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த அரங்கேற்ற நிகழ்வில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வி.பொன்னம்பலம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

ப.இ.செல்வராசாவின் மிருதங்க அரங்கேற்றத்துக்கு அணிசெய் இசைக் கலைஞர்களாக விளங்கியவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலிப் பாடகர் சங்கீத வித்துவான் நயினை எஸ்.வேலாயுதம் (பாட்டு), கே.சித்திவிநாயகம் (வயலின்), பிரபல தவில் வித்துவான் குழுக்கா கணபதி (கெஞ்சிரா).

இவ்வாறு மிருதங்கக் கலையுலகில் மங்களபூர்வமாகப் பிரவேசித்த செல்வராசா, மிருதங்கக் கலையின் நுட்பங்களை மேலும் அறியும் நோக்



மிருதங்க வித்துவான்
'ஈழ சந்திரசேகரர்',
'கலாபூஷணம்'
**பசுபதி இரத்தினம்**
**செல்வராசா**

குடன் 1973ஆம் ஆண்டு இந்தியா சென்றார். அகில இந்திய வானொலியின் வயலின் வித்துவான் திருக்கோவறணம் டி.எஸ்.உலகநாதன் அவர்கள் ப.இ.செல்வராசாவின் கலை ஆர்வத்தை வியந்து அகில இந்திய முதல்தர மிருதங்க வித்துவான் இராமநாதபுரம் சி.எஸ்.முருகபூபதியிடம் மிருதங்கக் கலையைக் கற்கும் வாய்ப்பை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்.

தொடர்ந்து தனது குருநாதரான சி.எஸ்.முருகபூபதியின் வழிநடத்தலுக்கு ஏற்ப அங்கு சங்கீத வித்துவாட்டிகளான எம்.எல்.வசந்தகுமார், ரி.வி. இரத்தினம், சங்கீத வித்துவான்களான சிங்கநல்லூர் இராதாகிருஷ்ணன், கே.ஜே.ஜேசுதாசன் ஆகியோரின் கச்சேரிகளுக்கு மிருதங்கம் வாசிக்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

இந்தக் காலத்தில்தான் அகில இந்திய வானொலியின் பிரபல வயலின் வித்துவான் திருக்கோவறணம் டி.எஸ்.உலகநாதன், இவருக்கு 'மிருதங்க வித்துவான்' என்னும் பட்டத்தினை வழங்கினார்.

பின் இலங்கை திரும்பிய செல்வராசா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சங்கீத வித்துவான் பரம் தில்லைராசா (வண்ணார் பண்ணை), சங்கீத வித்துவான் எம். சண்முகரத்தினம் (உடுவில்), சங்கீத வித்துவாட்டி சரஸ்வதி பாக்கியராசா (கொக்குவில்) ஆகியோரின் கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்தார். புல்லாங்குழல் வித்துவான் வசந்தகுலசிங்கத்தின் கச்சேரிகளிலும் மிருதங்கம் வாசிக்கும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது.

1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இசைவிழாவை நடத்திய 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தினர் ப.இ.செல்வராசாவுக்கு 'ஈழ சந்திரசேகரர்' என்னும் கௌரவப் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தனர். தொடர்ந்து 2000ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் அமைச்சு இவருக்குக் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவித்தது.

"தங்கள் பிள்ளைகளுக்கு மிருதங்கக் கலையைக் கற்றுக் கொடுக்க விரும்புகின்ற பெற்றோர் முதலில் எண்கணிதத்தின்படி தங்கள் பிள்ளைகளுக்குக் கலைஞானம், கலையாற்றல் இருக்கின்றதா எனப் பார்த்துக் கொள்ளவேண்டும். அத்துடன் இராசிப் பலனும் சாதகமாக இருக்கின்றதா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"தற்போது மிருதங்கம் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள் பணம் தான் பெரிது என்று நினைக்கின்றார்கள். இந்தநிலை மாறவேண்டும். இன்றைய பெற்றோர்கள் பலரும் தங்கள் பிள்ளைகள் மிருதங்கம் படிக்கின்றார்கள் என்ற பெருமைக்காகவே அந்தக் கலையில் நாட்டம் கொள்கின்றனர். இத்தகைய மனப்பான்மையும் அகலவேண்டும்.

"அதுமட்டுமன்றி மிருதங்கத்தைக் கற்பித்து அரங்கேற்றம் நடத்திவிட்டால் தமது பணி முடிந்துவிடுகிறது என்ற மனப்பான்மையுள்ள சில ஆசிரியர்களும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். இத்தகைய ஆசிரியர்கள் தமது எண்ணத்தை மாற்றி சம்பந்தப்பட்ட மாணவனை முழுமையான கலைஞனாக உருவாக்கித் தம்மை அர்ப்பணிக்கவேண்டும் - என்று கலை உலகத்தினருக்கு ஆலோசனை விடுத்தார் ப.இ.செல்வராசா - என்று தனது செவ்வியில் தெரிவித்தார்.

**செவ்வி: ஆனந்தன்**

# உலகில் அதிஉயர்ந்த கட்டடம் மலேஷியாவில் 'பெற்றோ நாஷ் ரவர்'

**நியூயோர்க் நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மையத்தின மீது கடந்த மாதம் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அடுத்து உலகிலுள்ள அதிஉயர் கட்டடங்கள் குறித்த விவரங்களை அறிவதில் ஆர்வம் ஏற்படுவது இயல்பே. இன்று உலகில் அதிஉயர் கட்டடமாக விளங்கும் "பெற்றோ நாஷ் ரவர்" கட்டடம் பற்றிய விவரத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த மாதம் 11ஆம் திகதி நியூயோர்க் நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மையத்தின் மீது பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து உலகிலுள்ள உயர்ந்த கட்டடங்கள் தொடர்பான விவரங்களை அறிவதில் பலருக்கும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் நியூயோர்க நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மையமானது உலகில் அதிஉயர்ந்த கட்டடங்களில் ஒன்றாகும். உலகில் இதுவரை நிர்மாணிக்கப்பட்ட உயரமான கட்டடங்களில் இந்த உலக வர்த்தக மையமானது உயரத்தில் 6ஆவது இடத்தை வகித்து வந்தது.

இதுவரை உலகில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களில் அதிக உயரமானது மலேஷிய நாட்டின் தலைநகரமான கோலாலம்பூரில் கட்டப்பட்டுள்ள 'பெற்றோ நாஷ் ரவர்' (PETRONAS TOWER) ஆகும்.

'பெற்றோ நாஷ் ரவர்' 1483 அடி உயரமானது. இந்தக் கட்டடமானது உயரத்தில் முதலிடத்தை வகித்தாலும் மாடிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இக்கட்டடம் முதலிடத்தைப் பெறவில்லை - அமெரிக்காவில் சிக்காகோ நகரில் அமைந்துள்ள சியர்ஸ்(SEARS) கட்டடம் 110 மாடிகளைக் கொண்டது. இருப்பினும் இந்தக் கட்டடத்தின் உயரமான மாடி (இறுதி மாடி) 'பெற்றோ நாஷ் ரவர்' கட்டடத்தின் இறுதிமாடியிலும் பார்க்க உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 'பெற்றோ நாஷ் ரவர்' கட்டடத்தில் 88 மாடிகளே அமைக்கப்பட்டுள்ளன. 88 மாடிக்கு மேலாக கூம்பு வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கூம்பு காரணமாகவே இந்தக் கட்டடம் உலகில மிக அதிஉயர்ந்த கட்டடமாக விளங்குகிறது.

1998இல் 'பெற்றோ நாஷ் ரவர்' கட்டட நிர்மாண வேலைகள் யாவும் பூர்த்தியடைந்தன. இந்தக் கட்டடத்



தைக் கட்டிமுடிக்க 5 ஆண்டுகள் எடுத்தன. முன்னர் குதிரைப் பந்தையத் திடலாகப் பயன்படுத்தப்பட்ட இடத்திலேயே 'பெற்றோ நாஷ் ரவர்' கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மலேஷிய அரசுக்குச் சொந்தமான பெற்றோலிய நிறுவனத்தின் தலைமையகமான பெற்றோ நாஷ் இந்தக் கட்டடத்தில் அமைந்துள்ளதால் இந்தக் கட்டடத்திற்கு "பெற்றோ நாஷ் ரவர்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்தில் பணிமனைத் தொகுதிகள் மட்டுமே உள்ளன. வதிவிடங்கள் எவருக்கும் வழங்கப்படவில்லை.

சீசர் பெலி (CESAR PELLI) என்ற கட்டடக் கலைஞரே இந்தக் கட்டடத்திற்கான வடிவமைப்புத் திட்டங்களைத் தயாரித்தார். இந்தக் கட்டடத்திற்கான வரைபடங்கள் உலக அளவில் கட்டடக் கலைஞர்களிடமிருந்து கோரப்பட்டன. இறுதியில் சீசர் பெலியின் வரைபடமே தேர்ந்தெடுக்கப்பட்டது. வரைபடங்கள் கோரப்பட்டபோது இந்தக் கட்டடமானது உலகில் அதிஉயர்ந்த கட்டடம் என்ற விதத்தில் வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என நியந்தனை ஏதும் விதிக்கப்படவில்லை.

இருப்பினும் சீசா பெலியின் வரைபடங்களைக் கண்ணுற்றதும் வர்த்தக மற்றும் கலாசார மையமான தலைநகர் கோலாலம்பூரில் இந்தப் புதுமையான கட்டடத்தை அமைக்கவேண்டும என்ற பேரார்வம் உருவானது.

"பெற்றோ நாஷ் ரவர்" கட்டுமானப் பணிகளுக்கு முற்றிலுமாக உள்ளூர் மூலப்பொருள்களே பயன்படுத்தப்பட்டன. சாதாரண கொங்கிறீட் கலவையிலும் பார்க்க மும்மடங்கு சக்திவாய்ந்த கொங்கிறீட் கலவை இந்தக் கட்டடத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டட நிர்மாணப் பணிகளில் 7 ஆயிரம் பணியாள்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தக் கட்டடத்திற்கான அத்திவாரத்திற்குத் தொடர்ந்து 60 மணித்தியாலங்கள் கொங்கிறீட் போடப்பட்டது. அத்திவாரத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கொங்கிறீட்டின் அளவு ஒரு லட்சத்து 53 ஆயிரம் கன அடியாகும்.

'பெற்றோ நாஷ் ரவர்' கட்டடமானது இரு கோபுரங்களைக் கொண்ட கட்டடத் தொகுதியாகும். இந்தக் கட்டடத்தின் இரு கோபுரங்களும் அவற்றில் 41ஆவது, 42ஆவது மாடிகளில் அமைக்கப்பட்ட பாலங்களின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. 160 அடி நீளமான இந்தப் பாலங்களின் நிறை 750 மெற்றிக் தொன்களாகும். இந்தப் பாலங்கள் இரண்டும் முறைகள் மின்னல் தாக்குதல்களுக்கு உள்ளான போதிலும் பாதிப்புகள் ஏதும் இடம்

**தொகுப்பு: கஜனி**

பெறவில்லை. தீப்பிடிக்காத விதத்தில் (FIRE PROOF) இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆபத்து ஏதும இடம்பெறுமாயின் ஒரு கோபுரத்தில் இருந்து மறுகோபுரத்திற்குச் செல்லவே இந்தப் பாலங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இந்த இரு கோபுரங்களையும் கொண்ட கட்டடத்தின் பரப்பளவு 40 லட்சம் சதுர அடிகளாகும். இது 48 உதைபந்தாட்ட மைதானங்களின் பரப்பளவுக்குச் சமமானதாகும். இந்தக் கட்டடத்தில் பணிமனைகளுக்கு மேலதிகமாக கலாபவனம், கேட்போர் கூடம், பிரார்த்தனை மண்டபங்கள் ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் இக்கட்டடத்தின் உச்சிக்கும் கீழ்த்தளத்திற்கும் இடையே சென்று வர 58 மின் ஏணிகளும், பராமரிப்புப் பணிகளுக்கு 18 மின் ஏணிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடத்தின் சுற்றுவரவுள்ள சுவர்கள் கண்ணாடிகள், உருக்கு மற்றும் அலுமினியத்தினால் அமைக்கப்பட்டுள்ளன. தோர்டன் தொமசெற்றி மற்றும் ரன்ஹில் பெர்செகுட்டு என்ற பொறியியல் நிறுவனம் இந்தக் கட்டடத்திற்கான நிர்மாண வேலைகளை மேற்கொண்டது.

இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்குச் செலவான மொத்தநிதி ஆயிரத்து 600 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது இலங்கை நாணயத்தில் ஒரு லட்சத்து 44 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும். ★

## மானிப்பாய்ப் பகுதியில் உள்ள
# வாய்க்கால்கள் திருத்தப்படாததால் வெள்ளம் ஏற்படும் அபாயநிலை

நவாலி,ஒக்.8

மானிப்பாய்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட சில வெள்ளவாய்க்கால்கள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை.

இதனால் சம்பந்தப்பட்ட வாய்க்கால்களில் பற்றைகள், செடிகொடிகள் வளர்ந்துள்ளதாகவும் -

இவற்றுள் மறைந்திருக்கும் கொடிய விஷ ஜந்துக்கள் வீதியால் பயணம் செய்யும் பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாகவும் - கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவுவேளைகளில் சம்பந்தப்பட்ட வீதிகளூடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள் வெளிச்சத்துடன் செல்லவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை -

பருவமழை ஆரம்பித்துவிட்டது. வாய்க்கால்கள் புனரமைக்கப்படாவிட்டால் மழைவெள்ளம் வாய்க்கால்களில் தேங்கி நிற்கவேண்டிய நிலை உள்ளதாகவும், இந்த நீர் குடிமனைகளுக்குள் புகுவதனால் மக்கள் இடம்பெயர்ந்து செல்லவேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் -

பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (க-7-100)

# உலக லயன்ஸ் கழக சேவைகள் தினம் இன்று

**சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சேவைகள் தினம் இன்று ஒக்ரோபர் 8ஆம் திகதியாகும். இதனை ஒட்டி இச்சிறுகுறிப்பு பிரசுரமாகின்றது.**

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் அமெரிக்காவிலுள்ள லா சேல் ஹோட்டலில் 1917ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. அக்காலத்தில் பலவிதமான கழகங்கள் தங்களுடைய கழக அங்கத்தவர்களின் பொருளாதார நன்மைகளைக் கவனிப்பதற்காகவே மட்டும் செயற்பட்டன. இவ்வேளையில் இன்சூரன்ஸ் கம்பனி ஒன்றில் அதிகாரியாகப் பணிபுரிந்த மெல்வின் ஜோன்ஸ் என்னும் துடிதுடிப்பான இளைஞர் தனது துணைவியார் றோஸ் அமன்டாவுடன் இணைந்து "இவ்வாறான மனிதர்களைக் கொண்டு ஒரு சமூக நலன் காக்கும் அமைப்பை ஏன் அமைக்க முடியாது" எனத் தீவிரமாக யோசித்தார். அதன் பலனாக 07.06.1917ஆம் திகதி லயன்ஸ் கழகங்களை உருவாக்க எண்ணினார். 07.06.1917ஆம் திகதி லயன்ஸ் கழகங்கள் உருவாக்க எண்ணக்கரு ஏற்பட்டாலும் 08.10.1917ஆம் திகதி டெக்ஸாஸ் நகரில் நடத்தப்பட்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்பே சர்வதேச லயன்ஸ் கழகங்கள் உருவாகின. திரு.மெல்வின் ஜோன்ஸ் அவர்கள் செயலாளர் பதவியை ஏற்று லயன்ஸ் கழகங்களை வழி நடத்தினார்.

### சர்வதேச லயன்ஸ் கழகங்களின் வளர்ச்சி

இவ்வாறு சமுதாய வளர்ச்சிக்காக உருவாகிய லயன்ஸ் கழகங்கள உடனடியாகவே முதலாவது உலக மகா யுத்தத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு உதவத் தொடங்கின. அதனுடன் 1919ஆம் ஆண்டு அமெரிக்காவின் பரவிய கொடிய காய்ச்சலுக்கும் எதிராக பல சேவைகளும் செய்தன. 1920ஆம் ஆண்டுகளில் அது மிகவும் துரிதமாக வளர்ந்து மெக்சிக்கோ, சீனா, கனடா ஆகிய நாடுகளுக்குப் பரவத் தொடங்கி 2,200 கழகங்களுடன் 80,000 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு துரித வளர்ச்சி கண்டது.



தற்போது லயன்ஸ் கழகங்கள் 185 நாடுகளில் 45,000 கழகங்கள் 14 லட்சம் அங்கத்தவர்களுடன் உலகிலேயே ஒரு மிகப்பெரிய சேவை நிறுவனமாக விளங்குகின்றது.

### பார்வைக்கு முதலிடம்

1925ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் ஹெலன் கீலர் அம்மையார் அவர்கள் வெளிப்படுத்திய

**லயன் செ.ஞானராஜா**
*பிராந்தியத் தலைவர்*
*பிராந்தியம் 10*
*மாவட்டம் 306B*

சவாலை சர்வதேச லயன்ஸ் கழகங்கள் ஏற்றுக்கொண்டு அன்று தொடக்கம் இன்று வரை விழிப்புலன் சம்பந்தமான செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றன. பலவிதமான கண் பரிசோதனை நிலையங்கள், கண் வங்கிகள், விழிப்புலன் குறைந்தோர்க்கான உதவிகள் அடங்கிய பல செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை 130 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேலாக பெரிய அளவிலான விழிப்புலன் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

### லயன்ஸ் கழகக் குறிக்கோள்

1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் லயன்ஸ் கழகங்களின் குறிக்கோளாக 'நாம் சேவைக்காக' (WE SERVE) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து 1961ஆம் ஆண்டு இலினோய்ஸ் நகரில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டது. 13.1.1879ஆம் ஆண்டு பிறந்த திரு.மெல்வின் ஜோன்ஸ் அவர்கள் தனது 44வருட லயன்ஸ் சேவையின் நிறைவுடன் 1961ஆம் ஆண்டு அமரத்துவம் அடைந்தார்.

### சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதியம்

இவ்வாறு வளர்ச்சி கண்ட சர்வதேச லயன்ஸ் கழகங்கள் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் விழிப்புலன் பாதுகாப்பிற்கும் மற்றும் ஏனைய நீண்ட கால சமூக செயற்றிட்ட உதவிக்குமாக ஒரு நிதியத்தினை ஆரம்பித்து பல சேவைகளைச் செய்து 30.06.2000ஆம் ஆண்டு காலப்பகுதி வரை $295,862,445 சொத்துக்களைக் கொண்ட ஒரு நிதியமாக விளங்குகிறது.

### யாழ்.போதனா வைத்தியசாலைக்கான உதவி

கடந்த வருடம் இந்நிதியம் யாழ. போதனா வைத்தியசாலைக்கு அமெரிக்க டொலர் 113,000 பெறுமதியான (இலங்கை நாணயத்தில் ஏறத்தாழ 90 லட்சம்) பல உபகரணங்களை வழங்கி உதவியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சைப் பிரிவின் செயற்பாடு 3 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்.மாவட்டத்தில் லயன்ஸ் கழகங்கள்

2001-2002 ஆண்டுக்குரிய மாவட்ட ஆளுநரான லயன் உபாலி சமரசிங்க MJF அவர்களின் குறிக்கோளான "சிறந்த நாளைக்காக இன்று சேவை செய்வோம்" என்கின்ற சேவை மனப்பாங்குடன் யாழ்.மாவட்டததில் தற்போது 16லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306 Bஇன் கீழ் இரண்டு பிராந்தியங்களைக் கொண்டு நான்கு வலயங்களாக ஏறத்தாழ 475 அங்கத்தவர்களுடன் செயற்படுகின்றன. ★

**சர்வதேச லயன்ஸ் கழகங்கள் 8.10.1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 84 வருடங்களாக பல்வேறு சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. உலகிலேயே மிகப்பெரிய சேவை நிறுவனமாக விளங்கும் லயன்ஸ் கழகம் உலகெங்கும் சுமார் 45 ஆயிரம் கழகங்களை உள்ளடக்கியதாகும்.**

# புறநிலைப் படிப்புகள் அலகில் இருபது கற்கை நெறிகள்

## புதிய கல்வியாண்டில் ஆரம்பிக்க ஏற்பாடு

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு இந்த மாதம் ஆரம்பமாகும் 2001 - 2002 கல்வியாண்டில் இருபது அடிப்படைக் கற்கை நெறிகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள இக்கற்கை நெறிகளைப் பயில்வதற்கு 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் அனுமதிக்கப்படுவர். ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் இக் கற்கைநெறிகளைக் கற்பதன் மூலம் அதிக பயனைப் பெறமுடியுமென புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கல்வியாண்டில் இடம்பெறவுள்ள கற்கைநெறிகள் வருமாறு:-

★ தொடர்பாடலுக்கான ஆங்கிலம (அடிப்படை)
★ தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (உயர்தரம்)
★ அலுவலகத்தில் பணிபுரிவோருக்கான ஆங்கிலம்
★ முன்பள்ளிக் கல்விக்கான ஆங்கிலம்
★ முன்பள்ளிக் கல்வி
★ மனித உரிமைகள்
★ பெண்களும் அபிவிருத்தியும்
★ இளைஞரும் அபிவிருத்தியும்
★ குழந்தைகளும் அபிவிருத்தியும்
★ புவிக்கோளமயமாக்கலும் அபிவிருத்தியும்
★ கலாசாரமும் அபிவிருத்தியும்
★ பேண்தகு அபிவிருத்தி
★ அலுவலக முகாமைத்துவம்
★ இதழியல்
★ விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு
★ உணவகங்களின் முகாமைத்துவம்
★ தாதிப் பராமரிப்பும் முதலுதவியும்
★ விலங்கு வளர்ப்பு, கோழி வளர்ப்பு அபிவிருத்தி
★ மொழிபெயர்ப்புக் கலை
★ நூலகவியல்

மேற்குறித்த கற்கைநெறிகளுக்குப் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்தே கற்பித்தல் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி. மாணவருக்கு!

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இருந்து இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களில் -

சங்கீதம் மற்றும் நடனம் ஆகிய பாடங்களில் தோற்றவுள்ளோருக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமையும்-

விவசாயம், மனையியல் மற்றும் உடற்கல்வியும் சுகாதாரமும் ஆகிய பாடங்களில் தோற்றவுள்ளோருக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமையும் - நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களை நெல்லியடியில் உள்ள கிறிஸ்ரல் கல்வி நிலையத்துக்குக் குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்குமாறு அதிபர் ரி.கந்தையா அறிவித்துள்ளார். (ம-10)

# உள்ளூராட்சி மன்ற வருமான விவரம் கோருகிறது திணைக்களம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

- யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்ற வருமானம் தொடர்பான மூன்று ஆண்டுகால விவரங்களை தனித்தனியே சமர்ப்பிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கேட்டுள்ளது

1998 முதல் 2000ஆம் ஆண்டு வரையான 3 ஆண்டுகளுக்குரிய வருமான விவரங்களே கோரப்பட்டுள்ளன. இதற்குரிய அறிவுறுத்தல் கடிதம் கடந்த வாரமே திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையால் வழங்கப்பட்ட நன்கொடை, உள்ளூராட்சி மன்றங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நன்கொடை மற்றும் வேறு நன்கொடைகள் தொடர்பான வருமான விவரங்கள் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (க-9-ரி)

# கைதான 4 இந்திய மீனவரும் யாழ்.நீதிவான் முன்னிலையில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.8

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் 4 இந்திய மீனவர்களை ஊர்காவற்றுறை பொலீஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

பகிர்சாமி பரமானந்தன், சமுத்திரராஜா கலைமணி, ராஜாங்க ராஜேந்திரன், சண்முகம் செல்வராஜா ஆகிய அந்த நால்வரையும் கடந்த வியாழக்கிழமை இலங்கைக் கடற்பகுதிக்குள் வைத்து கைது செய்த கடற்படையினர் மறுநாள் வெள்ளிக்கிழமை தம்மிடம் கையளித்ததாக பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த நால்வர் பற்றிய சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் வரும்வரை அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ)

# பல்துறைப் போட்டிகள் மிகுந்த உலகில் சவால்களைச் சந்திக்க கல்வியே அவசியம்

## பாடசாலை முத்தமிழ் விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.8

அறிவு முதன்மைபெற்ற இன்றைய நவீன யுகத்தில் பணத்திற்கும், கல்விக்கும், அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்புகள் நெருங்கிப் பிணைந்துள்ளன. எனவே பல்துறைப் போட்டிகள் நிறைந்த இந்த உலகில் சவால்களை எதிர்கொண்டு நிலைத்து நிற்க கல்வி அறிவும் அதனோடு இணைந்த தொழில்நுட்ப அறிவும் அவசியமாகும்.

- யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைத் தலைவர் இரா.சிவச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் முத்தமிழ் விழாவும் கடந்த முதலாம் திகதி கல்லூரியின் நடராஜர் மண்டபத்தில் செல்வன் மு.இராசகுமார் தலைமையில் நடைபெற்றன.

அதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிவச்சந்திரன் உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது:-

தமிழர் பாரம்பரியம் ஒரு கல்விப் பாரம்பரியம். அமரர் இந்துபோட் சு. இராசரத்தினம் போன்ற பெரியார்கள் அக்காலத்தே சைவத்தையும், தமிழையும் பேணி வளர்ப்பதற்கு தமிழர் வாழும் பிரதேசம் தோறும் பாடசாலைகளை அமைத்தார்கள். தமிழ் மக்களின் மேம்பாட்டிற்கு உழைத்தார்கள்.

தமிழர்களின் எதிர்காலம் அறிவு மேம்பாட்டில்தான் தங்கியுள்ளது. பண்டைக்காலத்தில் உடல் உழைப்பு முதன்மையாகவிருந்தது. மானிய சமூகத்தில் நிலம் முதன்மைபெற்றது. கைத்தொழில் காலத்தில் 'முதல்' முதன்மைபெற்றது.

இன்றைய நவீனயுகத்தில் 'அறிவு' முதன்மைபெற்றுள்ளது. எனவே மாணவர்கள் அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்குத் தங்களைத் தயாராக்குதல் வேண்டும். பல்துறைகளிலும் போட்டி நிறைந்த இவ்வுலகில் கல்வியில் மேம்பாடு அடைவதன் மூலம்தான் முன்னேறமுடியும். எதிர்காலத்தில் ஆங்கிலக் கல்வி, கணனி அறிவு என்பன கல்விசார் தொழில்களை ஆற்றுவதற்கு அவசியம். அவற்றை மாணவர்கள் பயில்வதன் மூலம்தான் உலகத்தில் இன்று நிலவும் போட்டிகளுக்கும் சவால்களுக்கும் உங்களால் முகம்கொடுக்கமுடியும் - எனக் கூறினார்.

மாணவர் சஞ்சிகையான 'நதி' சஞ்சிகையை மூதறிஞர் சொக்கன் வெளியிட்டு வைத்தார். சுமார் 10 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் இச்சஞ்சிகை முதன்முறையாக அச்சில் வெளியிடப்பட்டது.

வெளியீட்டுரையில் எழுத்தாளர் க.சொக்கன் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் எழுத்தார்வம் இத்தகைய சஞ்சிகைகள் மூலம் வளம்பெறும். இணைப் பாடவிதான செயற்பாட்டிற்கு சஞ்சிகைகள், அரங்கு அறிக்கைகள் பெரிதும் துணைபுரியும். எழுத்தில் ஏற்ற சொற்களைக் கையாள்வதன் மூலம் சொல்லப்படும் கருத்துக்கள் சிறந்த முறையில் உரியவரைச் சென்றடையச் செய்ய முடியும். அதற்கு வாசிக்கும் பழக்கமும், சொற்களைக் கையாளும் திறமையும் வளர வேண்டும் - என்றார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆசிரியை திருமதி லோறன்ஸ் நிகழ்த்தினார். திருமதி சரோஜா சிவச்சந்திரன் பரிசில்களை வழங்கினார். (ஐ)

# வடமராட்சிக்கு விரைவில் கேபிள் தொலைபேசி வசதி

## ரெலிகொம் முகாமையாளர் தகவல்

வடமராட்சிப் பகுதிக்கு மிக விரைவில் கேபிள் தொலைபேசி வசதி வழங்கப்படவுள்ளது. இதற்காக அப்பகுதியில் பரிவர்த்தனை நிலையமொன்று அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு 'ரெலிகொம்' நிறுவன வடபிராந்திய பொதுமுகாமையாளர் எஸ.கனகசூரியர் தெரிவித்தார.

நேற்றுமுன்தினம் காலை பஸ்தியான் ஹோட்டலில் இடம்பெற்ற வாடிக்கையாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறுகையில், பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள தொலைபேசிக் கோபுரத்துக்கு பூசுவதற்கான வர்ணங்களை மிகுந்த சிரமத்தின் மத்தியில் தற்போது கொண்டுவந்து சேர்த்திருப்பதாகவும் - வர்ணம் பூசுதல உள்ளிட்ட இறுதிக்கட்டப் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதமளவில் முடிவடையும் என எதிர்பார்ப்பதாகவும் - தெரிவித்தார்.

கோபுரப் பணிகள் முடிவடைந்ததும், தொலைபேசி இணைப்புகள் அதிகரிக்கப்படாதபோதும், தற்போது அழைபபுகளுக்கு உள்ள நெருககடி தீர்ந்துவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரெலிகொம் நிறுவனத்துக்கு பணப் பற்றாக்குறை உள்ளபோதும், வடமராட்சி மற்றும் சுன்னாகம் உட்பட 'மோட்டரோலா' தொலைபேசி பயன்படுத்தப்படும் இடங்களில் கேபிள இணைப்பை ஏற்படுத்துவதற்கு தானும ரெலிகொம் நிறுவன வடபிராந்தியப பணியாளர்களும் முழுவீச்சில் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் - அதற்கு வாடிக்கையாளர்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவசியம் என்றும் - எஸ். கனகசூரியர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

# இடம்பெயர்ந்த 20 குடும்பங்கள் இடமாற்றம்

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து மல்லாகம் சந்திக்கு அண்மையில் உள்ள நீதிவான்முகாமில் தங்கியிருந்த இருபது குடும்பங்கள் கோணப்புலம் முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளன. நீதிவான்முகாம் அமைந்துள்ள இடத்தை விடும்படி காணி உரிமையாளர் கேட்டுக்கொண்டதை அடுத்தே இக்குடும்பங்கள் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. (க-86)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.மத்திய கல்லூரி மாணவன்
செல்வன் செல்வரத்தினம் நிவேஜன்
அவர்கள் (புள்ளி 128)

2001 – 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு, நியூ ஸ்ரார் கல்வி நிறுவனத்தினர் நிவேஜனை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றார்கள்.

பிரதான வீதி,
வல்லை றோட், அச்சுவேலி.

நிர்வாகியும், ஆசிரியர்களும்,
நியூ ஸ்ரார் கல்வி நிறுவனம்.
(93100)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை மாணவி
செல்வி ஸ்ரீதரன் கிருஷா

அவர்கள் 2001 - ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு கிருஷாவைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவருக்குக் கல்வியறிவு புகட்டி ஊக்கமளித்த கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிருஷன் ரியூசன் நிறுவன ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் இவர் கல்வியில் சிறந்து வளர அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா ரூபன், பிரான்ஸ் பெரியமாமா, அத்தை, மச்சாள், மச்சான்மார், மாமா, அத்தை, மச்சான்மார் ஆகியோர் மனமார வாழ்த்துகின்றனர்.

செ.குலச்செல்வம்.
(மாமா)

சாவகச்சேரி. (93095)



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10
-
05
-
1912



உதிர்வு
11
-
10
-
1998

## அமரர் ஆறுமுகம் சம்பந்தர்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

திதி: சஷ்டி (08.10.2001)

மறைந்தது ஆண்டு மூன்று மண்மீது. ஆனாலும்
மறையாது உன்நினைவு மனத்தைவிட்டு ஒரு கணமும்
வான்மழை இல்லாது வாடுகின்ற பயிரானோம்
ஆன்மாவின் அமைதிக்கே அனுதினமும் இறைஞ்சுகின்றோம்.

*193, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(93105)

அன்பு மனைவி,
மக்கள், மருகர், பேரர்.



# 41ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
06
-
01
-
1935



மறைவு
29
-
08
-
2001

## திருமதி புவனேஸ்வரி சீவரத்தினம்

அழுது கண்ணீர்சிந்தி அரற்றுகின்றோம் அம்மா!
எழுந்துவந்து எங்கள் ஏக்கம் தீர்க்க மாட்டீர்?
பழுது இன்றிப் பண்புடன் வளர்த்த உங்களை
தொழுது பணிந்து எங்கள் துயரத்தைக் கூறுகிறோம்!

*நிமலன் அடிதான் சேர்ந்து நித்தம் இன்புற்று வாழ*
*இறைவனை வேண்டுகிறோம்.*

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (08.10.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கிழுவானை ஒழுங்கை,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(93073)

- கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## சூரிய....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

காமல், இப்போது தொலைபேசிக் கட்டணப் பட்டியலில் நானாவிதச் செலவுகள் என்பது உட்பட பலவித வகைகளில் பலவிதத் தொகைகள் சூரிய மின்கலத்துக்கான கட்டணமாக குறிப்பிடப்பட்டிருப்பதும் - சூரிய மின்கலத்தைப் பெறாத ஒருவருக்கும், அதற்கான கட்டணத்தைச் செலுத்துமாறு கட்டணப் பட்டியல் அனுப்பட்டிருப்பதும் சந்தேகங்களை எழுப்புவதாக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

### குளறுபடிகளுக்கு நிறுவனமே காரணம்

இந்தக் குளறுபடிகளுக்கு 'ரெலிகொம்' நிறுவனத்தின் தவறுகளே காரணம் என்பதை ஒப்புக்கொண்ட நிறுவன பொதுமுகாமையாளர், ஆயினும் தம்மால் எதுவும் செய்யமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

கட்டணத்தைச் செலுத்த வசதியாக அவகாசம் வழங்குவதாகவும்- இனிவரும் காலங்களில் இத்தகைய இழுபறி நிலை உருவாவதைத் தடுக்க பாவனையாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

உத்தேச ஒப்பந்தத்தின் மாதிரி வரைவையும் அவர் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் காண்பித்தார்.

இறுதியாக, ஒப்பந்த வரைவில் உள்ள ஆட்சேபத்துக்குரிய பகுதிகள் பற்றியும், சூரிய மின்கலத்துக்கான கட்டணம் தொடர்பாக ரெலிகொம் நிறுவனத்தின் நிலைப்பாடு பற்றியும் தத்தமது சங்க உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு இதற்கான பதிலையோ அல்லது அடுத்த கட்ட நடவடிக்கையையோ தீர்மானிப்பதாக கலந்துரையாடலில் பங்குகொண்ட தொலைபேசிச் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-9)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சீமாட்டி லீலாவதி
இராமநாதன்
நினைவுப் பேருரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த பதினெட்டு வருடங்களாக பட்டமளிப்பு விழாவில் இரண்டாம் நாள் நிகழ்வாக சீமாட்டி லீலாவதி இராமநாதன நினைவுப் பேருரையை நடத்தி வந்துள்ளது. இவ்வருட பதினெட்டாவது நினைவுப் பேருரையை நடனத்துறைத் தலைவரும், கல்வியியற்துறைப் பேராசிரியருமாகிய சபா. ஜெயராசா அவர்கள்

*"சைவ சித்தாந்தக் கல்வியும்*
*பரத நடனமும்"*

என்னும் தலைப்பில் இன்று (2001.10.08) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும்
அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.

(C/18567) உபவேந்தர்.



# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை, கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(92592)



யா/மெதடிஸ்த பெண்கள்உயர்தரபாடசாலை
பருத்தித்துறை

**வகுப்பு 6 - அனுமதிக்கான விண்ணப்பம் 2002**

மேற்படி வகுப்புக்குச் சேரவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை பாடசாலையில் 20/= செலுத்திப்பெற்றுக் கொள்ளவும்.

*விண்ணப்ப முடிவு திகதி:* – 31.10.2001

(C-18539) - அதிபர்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய
வித்தியாலய மாணவி
*செல்வி நடராசா தர்ஷிகா*
(125 புள்ளிகள்)

2001இல் நடைபெற்ற 5ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வி தர்ஷிகா சிறப்பாகச் சித்தி எய்தியமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், பரீட்சைக்கு அவரைத் தயார்ப்படுத்தி நெறிப்படுத்திய ஆசிரியர்

திரு.சி.ஸ்ரீபாலகிருஷ்ணபிள்ளை

அவர்களையும் முதன்மை நிலைகளில் கல்வி புகட்டிய அனைத்து ஆசிரியர்களையும் ஒத்துழைத்த முகாமையையும் பாராட்டி நன்றி நவில்கின்றோம்.

*வரணி.* (93135) - அன்பின் பாச உறவுகள்.



# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்*

மேற்படி வித்தியாலய புனரமைப்பு வேலைகளுக்காக 2 லட்ச ரூபா நிதி ஒதுக்கீடு செய்து, அதிலிருந்து 1 லட்ச ரூபாவை எமக்கு உடனடியாக வழங்கி உதவியவர்களான,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

*யாழ்.மாவட்ட E.P.D.P. நாடாளுமன்ற உறுப்பினர்*
கௌரவ **கா.வே.குகேந்திரன்**
(ஜெகன்)
அவர்களையும்





*ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளர்*
உயர்திரு. **ந.மதனராஜா** (J.P.U.M.)
அவர்களையும்

*வேலணை பிரதேச சபைத் தலைவர்*
உயர்திரு. **ந.கருணாகரகுருமூர்த்தி**
(J.P.U.M.)
அவர்களையும்



*நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பாடசாலைச் சமூகம்,
*யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம், நயினாதீவு.*
(93125)



# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

## 2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பிள்ளைகள்.

1. *செல்வன் ஸ்ரீபவன் ரஜீபவன்* – *157* (புள்ளிகள்)
2. *செல்வன் சிவராசா சிவாஸ்கர்* – *136* (புள்ளிகள்)
3. *செல்வி ஜெயவீரசிங்கம் ஜெயசுகந்தினி* – *131* (புள்ளிகள்)
4. *செல்வன் பாலசோதி நிவேதன்* – *130* (புள்ளிகள்)
5. *செல்வன் செல்வராசா நிரோஷன்* – *129* (புள்ளிகள்)
6. *செல்வன் அழகரத்தினம் ஜீவராஜ்* – *128* (புள்ளிகள்)
7. *செல்வி கதிரவேலு வளர்மதி* – *120* (புள்ளிகள்)

ஆகியோர் சிறந்த பெறுபேறு பெறுவதற்கு அரும்பாடுபட்ட எமது பாடசாலை (யா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி) அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

எமது செல்வங்கள் கல்வியில் மேன்மேலும் சிறந்து விளங்க இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/ஞானாசாரியார் கல்லூரி,*
*கரவெட்டி.*

- பெற்றோர்கள்.
(93132)

ஆப்கானுக்கு எதிரான யுத்தம் வெடிக்கும் பட்சத்தில்

# அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகம் வரும்!

## ஸ்ரீலங்காப் படையினர் பாதுகாப்பு வழங்குவர்

கொழும்பு, ஒக்.8
தேவை ஏற்படும்பட்சத்தில் கொழும்புத் துறைமுகத்துக்கும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் வரலாம் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். இதற்கு முன் ஏற்பாடாக அந்நாட்டு அதிகாரிகள் கொழும்புத் துறைமுகத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

இந்த அமெரிக்க உயரதிகாரிகள்குழு இலங்கைக் கடற்படை அதிகாரிகளையும் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகளையும் சந்தித்துப் பேசியுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராகத் தாக்குதல்களை ஆரம்பிக்கவுள்ள அமெரிக்கா அதற்கான அனைத்துஏற்பாடுகளையும்மேற்கொண்டுவரும் நிலையில் கொழும்புத்துறைமுகப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நேரில் பார்வையிட்டுள்ளது.

மூவரடங்கிய குழு ஒன்றே கடந்த புதன்கிழமை கொழும்பு வந்து வெள்ளிக்கிழமை வரை இங்கு தங்கியிருந்து நிலைமைகளை ஆராய்ந்துள்ளது.

இக் குழுவில் அமெரிக்கக் கடற்படை மற்றும் மத்திய புலனாய்வுத்துறை (சி ஐ ஏ.) அதிகாரிகள் அடங்கியிருந்தனர்.

அமெரிக்கக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகம் வரும் பட்சத்தில் அவற்றின் பாதுகாப்பு எப்படி இருக்கும் என்பதை நேரில் ஆராய்வதே இவர்களது நோக்கமாயிருந்தது.

அத்துடன் இங்குவரும் அமெரிக்கக் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினரால் பாதுகாப்பு வழங்க முடியுமா எனவும் இலங்கை கடற்படையினரிடம் கேட்கப்பட்டதாகவும், அதற்கு கடற்படையினரும் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், இன்று திங்கட்கிழமைமலேசியத்தலைநகர் கோலாலம்பூரில் ஆரம்பமாகும் சர்வதேச விமான மற்றும் கடற்படைக்கலசண்காட்சியைப் பார்வையிட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி நேற்று மலேசியா புறப்பட்டுச் சென்றார்.

இந்தக் கண்காட்சியில் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியாஜேர்மனி, இலங்கை உட்பட 15 நாடுகள் கலந்து கொள்கின்றன. (க)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2001 - ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவரான

யா/சாவ.இந்துஆரம்பப்பாடசாலைமாணவன்

## செல்வன் நவநீதன் வேணுசரண்

154 புள்ளிகளைப் பெற்று சிறந்த பெறுபேற்றையடைய ஆக்கமும், ஊக்கமும் அளித்த யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வகுப்பாசிரியர் **திரு. பிறேம ரஞ்சித்** ஆகியோரை நன்றி தெரிவித்து மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், உறவினர்கள்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (39143)

---

# தமிழகப் பேரறிஞரின் சிறப்புரை

## இணுவில் அருள்மிகு பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்

காலம்:-
இன்று (08-10-2001) திங்கட்கிழமை
மாலை 5.00 மணி

இடம்:- பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத் திருமண மண்டபம்

தலைவர்:-
செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

வாழ்த்துரை:-
கவிமாமணி ந. வீரமணிஐயர் M. A.
சிவஸ்ரீ சோ. அரவிந்தன் குருக்கள்
(பிரதமகுரு)

சிறப்புச் சொற்பொழிவு:-
''தொண்டர் தம் பெருமை''

வழங்குபவர்:- சேக்கிழார் அடிப்பொடி
தில்லைஸ்தானம்
கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன்

நிறைவுரை:- திரு. க. தேவராசா
(விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்)

''அடியார்கள்''
பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்,
இணுவில்.

(சி/18572)

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 - 03 - 1940 | 08 - 10 - 1999 |

## திருமதி மகேஸ்வரி தர்மலிங்கம்

(ஆசிரியை)

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றேன்.

பிரிவால் துயருறும்:
கணவன் சி. தர்மலிங்கம்.

கல்வயல்,
சாவகச்சேரி. (93119)

---

# சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவருக்கு!

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து இவ்வருடம் ஜி.சி.ஈ.(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செய்முறைப்பரீட்சை பாடசாலை நேரத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி மகா வித்தியாலயத்தில் சங்கீத பாடம் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும், நடனபாடம் 11 ஆம் திகதியும், விவசாய விஞ்ஞானமும், மனைப்பொருளியலும் 16 ஆம் திகதியும், இணுவில் மத்திய கல்லூரியில் சங்கீத பாடமும், நடனபாடமும், 15 ஆம், 16 ஆம் திகதிகளிலும், விவசாய விஞ்ஞானமும், மனைப் பொருளியலும் 17 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

மாணவர்கள் உரிய கால அட்டவணைப்படி பரீட்சைக்குச் சமுகமளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார். (க)

---

## கோப்பாய்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பொருள்களுடன் அழைத்துச் சென்றனர்.

முதலில் கோப்பாய் இராணுவ பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்த பொது மக்கள், பின்னர் மேலதிக விசாரணைக்காக இவர்களைக் கோப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சி. சாந்தலிங்கம் (51வயது), சா. செல்வக்குமார் (27 வயது), சா. செல்வரூபன் (25வயது), சா. செல்வமதன் (20 வயது), சி. தயாளன் (10 வயது), வை. குணசிங்கம் (48 வயது), அ. சின்னையா (65 வயது) ஆகியோரே பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க-72)

---

# நாட்டின் பொருளாதாரம் இக்காலாண்டில் பெருவீழ்ச்சி

## மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 8
நாட்டின் பொருளாதாரம் இந்தக் காலாண்டில் பெரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளதாக மத்திய வங்கி நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர்ந்து வரும் யுத்தத்தினால் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரம் இந்தக் காலாண்டுக் காலப்பகுதியில் மேலும் மோசமாக வீழ்ச்சி கண்டுள்ளதாகவும்—

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் மீது அண்மையில் புலிகள் நடத்திய தாக்குதலே இந்தத் திடீர் வீழ்ச்சிக்குக் காரணம் எனவும்—அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அத்துடன் இனிவரும் காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்தில் எதிர்பார்க்காத அளவு பெருமளவு வீழ்ச்சி ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும்—

இதனால் இலங்கையில் பட்டினிச்சாவு, பஞ்சம் என்பன ஏற்படலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## நோய் பரவும் ஆபத்து

புன்னாலைக்கட்டுவன், ஒக்.8
புன்னாலைக்கட்டுவன், ஈவினை போன்ற பிரதேசங்களில் மழைவெள்ளம்கிணற்றுநீருடன் சேர்வதனால் தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. (க-133-ரி)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்
2001 - தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

(1) செல்வன் — யே. யேசுதன்
(2) செல்வன் — ப. கரன்
(3) செல்வி — கி. சுபாநந்தினி

ஆகிய மாணவர்களையும், அவர்களுக்குக் கல்வி புகட்டிய ஆசிரியை செல்வி நந்தினி தம்பிராசா மற்றும் அதிபர், ஆசிரியர்களையும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.
(93138)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மோகனாம்பிகை கணேசன்

(இளைப்பாறிய சங்கீத ஆசிரியை
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நுணாவில், கல்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு, தற்பொழுது வன்னியில் வசித்து வந்தவருமான சங்கீத பூஷணம் திருமதி மோகனாம்பிகை கணேசன் அவர்கள் (04-10-2001) வியாழக்கிழமை வன்னியில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான செல்லக்குட்டி-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், சு. கணேசனின் பாசமிகு மனைவியும், துர்க்காதேவி, சுபத்திராதேவி, மதுராதேவி, ஸ்ரீமாயவன் காலஞ்சென்ற செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவராஜா (சவூதி அரேபியா) ஸ்ரீஸ்கந்தராஜா (புதுக்குடியிருப்பு), இந்திரராஜா (கனடா), வதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி ஞானாம்பிகை சண்முகநாதன் (லண்டன்), முருகதாஸ்(சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி கமலா முருகதாசின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (06-10-2001) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு மல்லாவியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்.

77, பாலிநகர்,
வவுனிக்குளம். (93137)

---

## திருமதி வின்சென்ற் மதலேனம்

(அக்னேஸ்)

முருங்கன் கற்கடந்த குளத்தைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலி கிழக்கு தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வின்சென்ற் மதலேனம் (அக்னேஸ்) 06-10-2001 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் அன்னம்மா, சிசிலியா, அருள்நேசன், பற்றிமா, அனற்மேரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கொடுதோர். சிவபாலசிங்கம் (திருக்குமரன் மல்ரி சேவிஸ், அரியாலை), துரைசிங்கம் அன்ரன், கபசிந் அருள்நேசன் (ஆசிரியை, பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம்), மகேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (08 10-2001) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் பேராலய சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சிவபாலசிங்கம்.
(மருமகன்)

முகவரி:-
''சேச் லேன்''
திருநெல்வேலி கிழக்கு. (93146)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒரு மாத பிறிமா சிவப்பு - கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வம் மங்களமாளிகை, மாயக்கை, பருத்தித்துறை. (93114)

### பிறிமா குஞ்சுகள் விற்பனைக்கு

PRIMA, GREEN VALLEY, புறொயிலர் குஞ்சுகள் விலை 43/=. இன்று மாலை விநியோகிக்கப்படும். 22 நாள் வயது PRIMA சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.461, நாவலர் வீதி, ஆனைப்பந்தியடி அல்லது 'கிளின் சொட்' பின்புறம் யாழ்ப்பாண பஸ் நிலையம். (93107)

### காணி விற்பனைக்கு

இருபாலை, கோண்டாவில் வீதி, இராஜ வீதி சந்திக்கருகில் 33/4 பரப்புத் தோட்டக்காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வீ.சோமசுந்தரம், இராஜ வீதிச் சந்தி, கோப்பாய் தெற்கு. (93080)

### விற்பனைக்கு

அச்சகப் பாவனைக்கான நல்ல நிலையிலுள்ள ஜப்பான் சிலிண்டர் அச்சு இயந்திரமும் (Single demi Size), பிளேட்டின் அச்சு இயந்திரமும் (Crown 1/2 Size) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.சதானந்தசர்மா, 730, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (93087)

நல்ல நிலையிலுள்ள ஜெனறேற்றர் ஹொண்டா, எல்.கான்றில் E.G.650 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆனந்தன், சாவகச்சேரி வீதி, மந்திகை. (93033)

### வீடு வாடகைக்கு

இல.201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் (அடைக்கல மாதா கோயிலுக்கு அண்மையில்) சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரசாங்க திணைக்களங்கள்/பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டும் நேரில் தொடர்பு கொள்ளவும். (93128)

### விடற்றவன்

எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் நகுந்தரம்பிள்ளையின் "விடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும்" நூல் 10ஆம், 11ஆம் தரங்களில் மாணவர்கள் விரும்பிப் படமான தமிழ் இலக்கியம் கற்கப் பயன்படும். 50 பக்கங்கள்: 25ரூபா. (93139)

### அறை வாடகைக்கு

யாழ்.நகரில் அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (12 மணிக்குப் பின்) (93109)

---

## குப்பிளான் பகுதியில் கைகலப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

குப்பிளான் பகுதியிலுள்ள இரண்டு கோயில்களின் நிர்வாகங்களுக்கிடையே நீண்ட காலமாக நிலவி வந்த பகைமை உணர்வு கைகலப்பில் முடிந்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்த அடிதடியில் குப்பிளான் கிழக்கைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளான். (க-4)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 4 பல் வைத்தியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். போதனா வைத்தியசாலை பற் சிகிச்சைப் பிரிவுக்கு மேலும் நான்கு பல் வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் இருவர் வேறு அரசாங்க வைத்தியசாலைகளில் இருந்து மாற்றம் பெற்றவர்கள். மற்றைய இருவரும் இரு ஆண்டுகளுக்கு முன் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறி, அரச நியமனம் கிடைக்கப் பெறாது ஒப்பந்த அடிப்படையில் கடமை புரிந்து பின் தற்போது அரசினால் புதிதாக நியமிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களுடன் தற்போது மொத்தம் 9 பல் வைத்தியர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் கடமை புரிகிறார்கள். (ம-15)

---

## கணனிப்பயிற்சி விரிவுரைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் இலவச கணனிப் பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் - மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இன்றைய தினம் தவறாது சமுகம் தரவேண்டும் என்றும் - மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (க-7)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் 2001—ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவரான

**செல்வன் அ.இ.வினிபிறெட் லம்பேட்**

அவர்களை ஞானப் பெற்றோரும் அன்புச் சகோதரிகளான யசோதா, அலன்ரீனா ஆகியோரும் அப்பப்பாவும் மேன்மேலும் கல்வியிற் சிறப்புற்று பல்கலையும் கற்று வாழ இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றனர்.

"அலன் மகால்" - அ.வில்லியம் ஜேசுதாசன்
28, செல்லாச்சி அம்மையார் வீதி, ஞானப் பெற்றோர்
சுன்னாகம். குடும்பத்தினர். (93)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்

செல்வன்

## இராசநாயகம் கஜீபன்

2001 ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு, அகமிக மகிழும் நாம் அவர் மேலும் கல்வியில் சிறந்து வளர வாழ்த்துவதோடு, கல்விசார் துறையில் ஆக்கமும் ஊக்கமும் அளித்த சகலரையும் பாராட்டுகின்றோம்.

டச்சு றோட், திரு.சி.இராமச்சந்திரன் (சந்திராமாமா)
உடுவில், குடும்பத்தினர் மற்றும்
சுன்னாகம். (93121) பாட்டா, பெரியத்தை குடும்பத்தினர்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

### 5ஆம் தரப் புலமைப் பரீட்சை - 2001

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. சி.பிரணவி | 149 | 08. சி.செந்தூரன் | 130 |
| 02. சி.சிவஜனனி | 143 | 09. ப.விதூஷினி | 128 |
| 03. க.சரண்யா | 142 | 10. இ.நிரோஜன் | 127 |
| 04. இ.துஷாணி | 140 | 11. இ.ஸௌம்யா | 120 |
| 05. வ.சரிஜா | 136 | 12. கு.கௌதமிதேவி | 120 |
| 06. கே.சரவணன் | 134 | 13. ர.சதீசன் | 118 |
| 07. தீ.சுகன்யா | 131 | | |

சித்தியடைந்த மாணவர்களையும், வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த மாணவர்களையும், இவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக நின்ற அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
(93141)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2001-5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன்

செல்வன்

## பத்மநாதன் கரன்

122 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு அவரை ஊக்குவித்தவர்களான அதிபர், ஆசிரியர்கள், வகுப்பாசிரியை S. நந்தினி ஆகியோரையும் யாழ்ப்பாணம் BOND கல்வி நிறுவன ஆசிரியர்களையும் நன்றி தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்

நாவலர் வீதி, திரு. திருமதி யோ. பத்மநாதன் – பரமேஸ்வரி
நாவாந்துறை. (93136) குடும்பத்தினர்.

---

உ
ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்

## மூன்றாம் ஆண்டு நினைவு

### சின்னையா செட்டியார் கைலாயஞ் செட்டியார்

### முத்துக்குமாரசாமி

பிறப்பு: 12-02-1919 இறப்பு: 08-10-1998

*கந்தையில்லாது பிறந்த என்னை*
*சிந்தை விட்டகலாது முன்னேற்றிய*
*தந்தையே என்றும் உன்னை மறவாமை*
*முந்தை செய்த வினை என்க!*

443, மணிக்கூட்டு வீதி, மு.சிவலோகநாதன் (மகன்)
யாழ்ப்பாணம். (93144)

---



## உளங்கனிந்த பாராட்டுக்கள்

எமது பாடசாலை மாணவர்களான

| | |
|---|---|
| பே. மதுரதி | 151 புள்ளிகள் |
| க.அகிலா | 118 புள்ளிகள் |
| ப.ரஜிந்தன் | 118 புள்ளிகள் |

ஆகியோர் 2001 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் சிறந்த புள்ளிகளைப் பெற்றதையிட்டு அவர்களை உளப் பூர்வமாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
ப.மா.சங்கம், பா.அ.சங்கம்.
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

---

## நன்றியோடு பாராட்டுகின்றோம்



யாழ் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவி

செல்வி

### துஷாணி இராசநாதன்

2001- 05ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்றமையையிட்டு வாழ்த்துவதோடு, அவரை வழிநடத்திய வித்தியாலய அதிபர், ஆசிரியர்களையும் வகுப்பாசிரியர் திருமதி சிவானந்தன் அவர்களையும் மற்றும் நாவலர் கல்வி நிலைய ஆசிரியர்களையும் நன்றிகள் பல கூறிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

133,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (93153) சு.இராசநாதன் (அப்பா)

---

## வாழ்த்தி மகிழ்கின்றோம்

### அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்



ஐயாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. எங்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலான தொடர்புகொண்டவர் ஐயா அவர்கள். துர்க்கை அம்பாள் சந்நிதானத்தில் பலமுறை பிரசங்கம் செய்து பெருமை பெற்றவர். மேலும் துர்க்கை அம்பாள் மீது அந்தாதி, அநுபூதி, பிள்ளைத்தமிழ் போன்ற பாடல்களைப் பாடிய அம்பாள் உபாசகர். அளவெட்டி நாகவரத நாராயண தேவஸ்தான அறங்காவலராகவும், இந்து சமயப் பேரவைத் தலைவராகவும் பணிபுரிந்துவரும் ஐயா அவர்கள் 'கௌரவ முதுமாணி' பட்டம் பெற்றதை முன்னிட்டு அவரை வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றோம். ஐயா அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்து பணியாற்ற துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சமாதான நீதிபதி தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.* (C/18577)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 09 |
| 12 | 09 |
| 1909 | 2001 |

### திருமதி ஜானகியம்மா தில்லையம்பலம்

*எமது அன்புத் தெய்வமே! வற்றாத பாசம் வைத்தீரே!*
*மாதம் ஒன்று ஆனதம்மா! மறக்கவில்லை உங்கள் முகம்!!*
*நீங்கள் ஒன்று சென்றாலும் தீரவில்லை எங்கள் துயரம்!*
*பெற்ற பிள்ளைகளும் அன்பு மருமக்களும் பேரப்பிள்ளைகளும்*
*பூட்டப்பிள்ளைகளும் வருந்தி அழுகின்றார்கள் அம்மா!*
*உங்கள் அன்புமுகம் எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை!*
*நிதமும் உங்கள் நினைவலைகள் எம் மனதை விட்டகலவில்லை!*
**ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

நாளை (09.10.2001) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ், உங்கள் பிரிவால் துயருறும்:
(இஞ்சின் கடை) மக்கள், மருமக்கள்,
பிள்ளையார் கோயிலடி, பேரப்பிள்ளைகள்,
தொண்டமனாறு. (93150) பூட்டப்பிள்ளைகள்.

# மனதார வாழ்த்துகின்றோம்

மெமோறியல் அன்னையின் அடிப்படைத் தேவையை உணர்ந்து, அன்னையின் மறுசீரமைப்புக்காக ரூபா 10 லட்சத்தை ஒதுக்கீடுசெய்து, அதில் ரூபா 3 லட்சத்தை காசோலையாக உடன் வழங்கிய



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா (நா.உ.)**
அவர்களையும்



கௌரவ
**கா.வே.குகேந்திரன்**
(ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நா.உ.)
அவர்களையும்



உயர்திரு.
**அன்ரன் வெலிச்சோர் ஜோன்சன்**
(வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர்)
அவர்களையும்

மெமோறியல் அன்னையின் சார்பில் மனதாரப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை,
மானிப்பாய்.

(93163)

# வாழ்த்தும் இறை ஆசியும்



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில்
2001 - ஐந்தாம்தர புலமைப்பரிசிற் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றவரான
**செல்வன் வெங்கடசாமி ஜெயப்பிரசாந்த்**
(148 புள்ளிகள்)
அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் கல்வியில் சிறப்புற்று பல்கலையும் பெற வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

66,சிவன்பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (93155)

சித்தப்பா - இ.ராசன்
- இ.நாகேந்திரன்
சித்தி - கல்பனா
தங்கை - ஆசிகா

# கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் முன்னாள் நிர்வாக உறுப்பினர்
**சின்னையா வசந்தகுமார் (வசந்தன்)**
அவர்கள்
03.10.2001 அன்று ஜேர்மனியில் காலமானார். அவரது திடீர் மறைவைக் கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை. (93162)

நிர்வாக சபையினர்,
அம்பாள் சனசமூக நிலையம்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்





அமரர் அமரேசு நித்தியானந்தம்
தோற்றம்: 11.01.1953 மறைவு: 22.08.2001

திருமதி தியாகராஜா பவளம்
மலர்வு: 07.08.1931 உதிர்வு: 07.09.2001

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாகத் திகழ்ந்து
நேசமுடன் எம்முடன் வாழ்ந்த உங்களை மறக்க முடியவில்லை!
உங்கள் இருவரது ஆத்மாவும் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று (08.10.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சொர்ணவடலி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (93171)

பிரிவால் துயருறும்;
- குடும்பத்தினர்.

## செய்முறை பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.8

மந்துவில் ஸ்ரீபராசக்தி வித்தியாலயம், கொடிகாமம் அ.த.க.பாடசாலை, மந்துவில் றோ.க.த.பாடசாலை ஆகியவற்றில் இருந்து ஜி.சீ.ஈ (சாதாரண தர) பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இன்று முதல் நாவலர்மடம் அ.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

விவசாய பாடத்திற்கு இன்றும், சங்கீத பாடத்துக்கு நாளையும், மனையியல் பாடத்துக்கு நாளை மறுதினமும் செயன்முறைப் பரீட்சைகள் இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திலிருந்து ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செயன்முறைப்பரீட்சைகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் பாடசாலையில் நடைபெறவுள்ளன. இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை மனையியல், நாளைமறுதினம் புதன்கிழமை சங்கீதம், 11ஆம் திகதி வியாழக்கிழமை விவசாயம் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் இடம்பெறும் என அதிபர் அறிவித்துள்ளார்.(ஐ-7)

## மாணவனை விடுவிக்குமாறு கோரிக்கை

கோப்பாய்,ஒக்.8

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட முஸ்தீபு செய்து வருகின்றனர்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான சாந்திராஜ் டினோசன் (வயது 18) என்ற மாணவனே கடந்தமாதம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதான சக மாணவனை உடனடியாக விடுவிக்குமாறு மாணவர்கள் கோரியுள்ளனர். (ஐ-72)


ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
விஜய், சிம்ரன் நடித்த
ப்ரியமானவளே
தினசரி: 10.30, 2.30 (பு.நே.)
இன்று மாட்டும் விசேட காட்சி 5 மணி
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00 (மு.நே.)
(C/18457)

நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், தேவயானி, விக்ரம் நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
(ரீலீஸ்)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(93122)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மகாஜனக் கல்லூரியின் மாணவியான
**செல்வி வயிரவப்பிள்ளை அர்ச்சனா**
அவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளைப் பெற்று சிறந்த பெறுபேறு பெற்ற அவரையும் தேர்ச்சி பெறக்காரணமாக இருந்த மகாஜனக் கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் உரும்பிராய் வள்ளுவர் அக்கடமி ஆசிரியர்களையும் மற்றும் ஊக்கங் கொடுத்த அனைவரையும் நன்றி பலகூறிப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அன்புள்ள
மாமா - க.பூபாலசிங்கம்,
அண்ணா - ந.கவாஸ்கர்.

உரும்பிராய் மேற்கு,
அம்மன் வீதி. (93168)

# வாழ்த்துகின்றோம்

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவியும், மேற்படி வித்தியாலய உப அதிபரின் புதல்வியுமான
**செல்வி நடராசா துர்க்கா** அவர்கள்
2001 - தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 125 புள்ளிகள் பெற்று வித்தியாலயத்திற்குப் பெருமை தேடித் தந்தமைக்காக வாழ்த்துகின்றோம். இந்தப் பெருமைக்கு வித்திட்ட ஆசிரியர்களையும் நாம் பாராட்டுகின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

(93152)

## தமிழகப் பேரறிஞர் சேக்கிழார் அடிப்பொடி அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு



இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : 10.10.2001 புதன்கிழமை முற்பகல் 11 மணி
தலைவர் : நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
சிறப்புச் சொற்பொழிவு: "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்"
வழங்குபவர் : சேக்கிழார் அடிப்பொடி தில்லைஸ்தானம் கலாநிதி நடராஜன் இராமச்சந்திரன் (உயர்நீதிமன்ற நியாயவாதி, இந்தியா)
நன்றியுரை : செயலாளர்,
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு.
(C/18578)


Sats Tech Communication
We Bring the World to your Home
யாழ்நகரில் 8', 10', 12' டிஸ்அன்ரனாக்கள் டிஜிடல், அனலொக் ரிசீவர்கள், LNBக்கள் Motor Accuverter's கேபிள் T.V. அம்ப்ளிபயர், சனல் மிக்ஸர் என்பன விற்பனைக்கு பிந்திய சேவையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Dish System
Rs. 19,500 முதல்
LNB / ரிசீவர் என்பன சிறந்தமுறையில் திருத்திக்கொடுக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:
Jaffna Technical Institute, 266/1, Stanly Road, Jaffna.
National Video Centre, 182, K.K.S. Road, Kokkuvil.
(C/18580)


## புதுஊர் நாகதம்பிரான் கோயில்

கட்டடத் திருப்பணி நிதிக்காக 05.10.2001 இல் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. - 02635
இரண்டாம் பரிசு இல. - 00515
மூன்றாம் பரிசு இல. - 01148

ஆறுதல்பரிசு இலக்கங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 03948 | 00833 | 00101 | 00500 | 03372 |
| 01893 | 04384 | 04416 | 00972 | 03707 |

பரிசுக்குரியவர்கள் பரிசுப் பொருள்களை 15 தினங்களுக்குள் சீட்டினைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தவறினால் நாம் பொறுப்பாளிகள் அல்லர்.

- ஆலய உரிமையாளர்.

புதுஊர் நாகதம்பிரான் கோயில்
உரிமையாளர்: இ. சந்திரன்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு - யாழ்ப்பாணம். (93159)

# புரிந்துணர்வு உடன்படிக்கை பேச்சுக்குத் தடையாகாது!

## அரசதரப்புக் குழு ஐ.தே.கவுக்கு கடிதம்

கொழும்பு,ஒக்.8

அரசு, ஜே.வி.பியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவதைத் தடுக்கவில்லை.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்கள் ஐவர் அடங்கிய குழு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுப்பியிருக்கும் கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏடு இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்த விடயம் குறித்து பிரஸ்தாப தலைவர்கள் ஐவரும் கடந்த புதன் கிழமை ஜே.வி.பி. தலைவர்களுடன் கலந்துரையாடியதாகவும் -

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான ஏதேனும் முடிவு ஒன்றை எடுப்பதற்கு முன்னர் அது குறித்து தென்னிலங்கை மக்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து உடன்பாடு பெறப்படவேண்டும் என்று ஜே.வி.பி. நிபந்தனை விதித்திருப்பதாகவும் -

ஐ.தே.கவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பிரச்சினையை ஜே.வி.பி. தேசிய பிரச்சினையாக அங்கீகரிக்கிறது. இப்பிரச்சினை நாட்டின் உள்நாட்டு அரசியலில் முதன்மையான முக்கியத்துவம் பெறுகிறது. என்பதை அது அங்கீகரிக்கின்றது. ஆனால் இது தொடர்பான தீர்வு எதனையும் அவசரமாகச் செயற்படுத்தக் கூடாது என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடு என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்ப தாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

(ஐ-3)

## சண்டிலிப்பாய்க்கு புதிய பஸ்சேவை ஆரம்பம்

நவாலி,ஒக்.8

யாழ்ப்பாணத்திலிருந்து சண்டிலிப்பாய் ஆலங்குழாய் ஊடாக தெல்லிப்பழை வரையும் 749ஆம் இலக்க பஸ் சேவை கடந்த 3ஆம் திகதி புதன்கிழமை ஆலங்குழாய் முருகமூர்த்தி ஆலயத்திலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த 18 வருடங்களின் பின்பு மீண்டும் இடம்பெறும் இச்சேவை தினமும் ஐந்து தடவைகள் இடம் பெறுகின்றன.

(ஐ-100-ரி)

## நம்பிக்கையில்லாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*கற்பழிப்பு, பாலியல் சித்திரவதைகள், நியாயப்படுத்தமுடியாத பாரபட்சமான கைதுகள், தடுத்துவைத்தல் மற்றும் மோசமான இழிவுபடுத்தல் போன்றவையாலும் -*

*வடக்கு - கிழக்கில் விசேடமாக அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் நிலவும் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் நியாயமற்ற முறையில் தமிழ் மக்களுக்கு மறுக்கப்படுவதாலும் -*

*அதேசமயம், நோர்வே நாட்டின் அனுசரணையுடன் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன், தமிழ் தேசியப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்துவதற்கு திடமான - ஆக்கபூர்வமான - நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தவறியமையாலும் -*

*இவற்றின் காரணமாக, தமிழ் தேசிய பிரச்சினை அரசின் செயற்றிட்டத்தில் தற்போது முன்னுரிமை பெறாமையாலும் -*

*இந்த இருள்சூழ்ந்த நிலைமை தொடருமாயின் தமிழ் மக்கள் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும் வாழும் உரிமை மறுக்கப்படுவது தொடர்ந்தும் இடம்பெறும் என்ற காரணத்தினாலும் -*

*தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்தின் மீது தனது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், நம்பிக்கை இன்மையையும் வெளிப்படுத்துகின்றது என்பதை இந்நாடாளுமன்றம் மேலும் கருதுகின்றது."*

- இவ்வாறு திருத்தம் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் ஏனைய அரசியல் கட்சிகளையும் விசேடமாகத் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இத்திருத்தப் பிரேரணைக்கு முழுமையான ஆதரவை வழங்கும்படி கேட்டுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(உ)

# வெலிஓயாவில் சிப்பாய் பலி!

கொழும்பு,ஒக்.8

வெலிஓயாவில் பராக்கிரமபுரவில் அமைந்துள்ள படை நிலைகள் மீது நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து படையினர் சிறு ஆயுதங்கள் கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் -

விடுதலைப் புலிகள் இழப்புடன் பின்வாங்கி காடுகளுக்குள் தப்பிச் சென்று விட்டதாகவும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(ஐ-3)

திறீஸ்ரல் இசென்ரர்
நெல்லியடி
2002 A/L DAY CLASS
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்:-9.10.2001
பொருளியல்: ந.ப. 12 - பி.ப. 3 வரை
யாழ். :- S.வரதராஜன்
வணிகக்கல்வி:
10.10.2001 மு.ப. 11.30
(93165) யாழ். :- B.பசில்

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
பிரபு, நெப்போலியன், ரோஜா நடித்த
❖ மிட்டாமிராசு
பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
அல்டி
எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/18584)


எமது புதிய
வீடியோ CD வெளியீடு
மிட்டாமிராசு
வீடியோ விஷன்
(C/18586) யாழ்ப்பாணம்

வாழ்த்தும் பாராட்டும்



28 ஆண்டுகள் ஆசிரியராக,
தொலைக்கல்வி விரிவுரையாளராக,
சிரேஷ்ட போதனாசிரியராக
கல்விப்புலத்தில் சிறப்பாகக் கடமையாற்றி,
நேற்றையதினம் சேவையில் இருந்து
இளைப்பாறி
இன்று அகவை அறுபதில் கால்பதிக்கும்
மதிப்புக்குரிய
உயர்திரு. சண்முகம் சரவணமுத்து
அவர்கள்
தனது ஓய்வுக்காலத்தில் சகல சௌகரியங்களையும் பெற்று மனைவி, பிள்ளைகளுடன் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.
விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்.
தொலைக்கல்வி பயிற்சி நிலையம்,
யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். (C/18579)

திருவிழிப்பு



குணமாக்கல் வழிபாடு



இன்று (திங்கள்)
யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில்
மாலை 6.30 மணிக்கு
❖ தண்ணீர், எண்ணெய் ஆசீர்வதிக்கப்படும்.
❖ பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.
❖ மெழுகுதிரி கொண்டுவரவும்.
❖ பாடல் துண்டு கொண்டுவரவும்.
❖ இரவுணவை அருந்திவிட்டு வரவும்.
பேராலய வளவில் சைக்கிள் பாதுகாப்பு உண்டு.
– யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் –
(93175)

DMI
யாழ்நகர்
நாளை ஆரம்பம்!
போட்டிப்பரீட்சை
பயிற்சி வகுப்புக்கள்
I) எழுதுவினைஞர்
பொதுவிவேகம், மொழிஅறிவு
II) கூட்டுறவு அபிவிருத்தி
உத்தியோகத்தருக்குரியது
பொதுவிவேகம், பொதுஅறிவு
ஆசிரியர்: தவசேகர்
மாலை - 4- 6 மணி (SLT) (93134)

PAPER CLASS
A/L 2002
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl)
ஆரம்பம்: 09.10.01→Tue.
Mon., Tue., Thu→6.30–7.30 a.m.
விக்னா
கல்வி நிறுவனம் (93161)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2003 Biology
ஆரம்பம்: இன்று (8.10) 7a.m
By: திரு.தற்பரன்
Inorganic Chemistry
பிரிவு I Sat, Sun 6.30 - 7.30a.m
பிரிவு II Tue, Fri 6.30 - 7.30a.m
பிரிவு III Mon, Fri 5.00 - 6.00p.m
பிரிவு IV Mon, Fri 6.00 - 7.00p.m
By:- திரு.அன்பு (93168)

தேவை
பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகியோருக்கான சகல விதமான ஆடைகளும் வெட்டித் தைக்கக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு:-
T. கமலாவதி
C/o பரராஜசிங்கம்,
வராலி அம்மன் கோயில் லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (93142)

BITSMANS
கல்வி நிறுவனம் – மானிப்பாய்
A/L 2002
★ கலை ★ வர்த்தகம்
PAPER CLASS
Tamil, H.C. - N.பாலா
Logic - R.P.சர்மா
Drama - ஜோண்சன்
Geo. - ஜெகன்
Christ. - ஏன்சலீன்
Eco. - சண்
Acc. - N.ராஜன், தவா
Com. - நந்தீஸ்
G.A. - தவசேகர்
ஆரம்பம் -
10.10.2001 புதன் 3 p.m. (93094)

BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர்
A/L 2003
பௌதிகம்
நீர்நிலையியல்
By:- ஜெயசீலன்
ஆரம்பம்: இன்று 08.10.2001 3 p.m. (93143)

கலையக உறவுகளை
பாராட்டி வாழ்த்துகின்றோம்
5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்
மு.பார்த்தீபா – 137 புள்ளிகள்
மா.ரேகாதீபன் – 134 புள்ளிகள்
ப.அனோஜன் – 124 புள்ளிகள்
த.நிரூபா – 122 புள்ளிகள்
கிட்டிய புள்ளிகளைப் பெற்றவர்கள்
த.பானுஷா – 116 புள்ளிகள்
ஜெ.சிந்துஜா – 114 புள்ளிகள்
க.எழில்வதனி – 112 புள்ளிகள்
இ.வினோஜா – 108 புள்ளிகள்
ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர்கள், மாணவர்கள்,
கலையகம் கல்வி நிலையம்,
ஆவரங்கால். (93151)

நாவலர் - ஆனைப்பந்தி
Inorganic
ஆரம்பம்: இன்று 4 p.m.
Mon., Fri. 4 - 5 p.m.
Paper Class
Tue.,Wed.,Fri. 5 - 6 p.m.
By:- திரு.அன்பு (93164)

SUBRA(14)
சித்தன்கேணி
Spoken And Grammar
By: BRITTO
புதிய பிரிவு
09.10.2001 (செவ்வாய்)
காலை 8 மணி
பேச்சுச் சிங்களம்
By: லீலாகிருஷ்ணன்
செவ். - வியாழன்: 5.30 - 7மணி (C-18537)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஸ்ரீமதி சந்திரசேகரா

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீமதி சந்திரசேகரா 06.10.2001 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணர் பொன்னையா - சிதம்பரம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்திரசேகராவின் அன்பு மனைவியும், குலதேவனின் தாயாரும், சாந்தினியின் மாமியாரும், சிவசேகர், சிவசங்கரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், செல்வரட்ணம், தேசோமயம் மற்றும் காந்திமதி ஆகியோரின் சகோதரியும், பாக்கியம் காலஞ்சென்ற செல்வநாச்சி மற்றும் இராசலட்சுமி, இராஜகோபால் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந.இராஜகோபால்
(மைத்துனர்)

*உரும்பிராய் வடக்கு.*
***T.P. 589550*** *(கொழும்பு).*
(93145)

## மாணிக்கம் சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் மாணிக்கம் சிவசுப்பிரமணியம் நேற்று (07.10.2001) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகமணியின் அன்புக் கணவரும், சுதாகரன் (நோர்வே), சுமதி (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ரமணி, சசிகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சுதமலர் (நோர்வே), கருணாகரன் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் மாமனாரும், நிறோசன், லரிசன், அபர்ணா ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. கருணாகரன்
(மருமகன்)

*சண்டிலிப்பாய் மேற்கு,*
*சண்டிலிப்பாய்.*
(C/18585)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.